விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

**கல்யாண மாலை**
[சர்வதேச திருமண சேவை]
**T.P: 021 720 1005**



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 26 செவ்வாய்க்கிழமை (12.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328

## கோத்தாவைக் குற்றம் சுமத்துபவர்கள் நல்லாட்சியில் என்ன செய்தார்கள்

**வெள்ளைவான் வாக்குமூலம் ராஜிதவின் நாடகம் – அங்கஜன்**



(யாழ்ப்பாணம்)

கோத்தபாய ராஜபக்ஷவுக்குக் கிடைக்கவுள்ள தமிழ் மக்களின் வாக்குகளைத் தடுப்பதற்காக அமைச்சர் ராஜித சேனாரத்னவால் திட்டமிட்டு அரங்கேற்றிய நாடகமே வெள்ளை வான் சாரதியின் வாக்குமூலம் என பாராளுமன்ற உறுப் 23

## வவுனியாவில் காணாமல்போயிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவன் காட்டுக்குள் சடலமாக மீட்பு



(வவுனியா)

வவுனியாவில் காணாமல் போயிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்று காட்டுப்பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 23

# அடக்குமுறை ஆட்சிக்கு இடமளிக்கக்கூடாது

## தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை சஜித் ஒரு வருடத்தில் தீர்த்து வைப்பார்

**யாழில் சந்திரிகா தெரிவிப்பு**



(யாழ்ப்பாணம்)

படுகொலைகள், கொள்ளைகள் போன்ற அடக்குமுறை ஆட்சிக்கு மீண்டும் இடமளிக்கக்கூடாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க யாழில் வைத்து தெரிவித்துள்ளார்.

மேலும், சஜித் பிரேமதாஸ தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை ஒரு வருடத்துக்குள் தீர்த்து வைப்பார் எனவும் கூறியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## 1,113 கிலோ கிராம் பீடி இலையுடன் யாழில் இருவர் ௧்கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 113 கிலோகிராம் பீடி சுற்றும் இலைகளுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு கடற்படை அதிகாரிகள் நேற்று முற்பகல் குறித்த பகுதியில் மேற்கொண்ட கண்காணிப்பு பணிகளின்போது இந்தக் கைது இடம் பெற்றுள்ளது.

படகு ஒன்றில் 30 23

## மகளின் இழப்பை தாங்க முடியாத தந்தை மரணம் துன்னாலையில் சம்பவம்

(கரணவாய்)

மகளின் இழப்பை தாங்க முடியாமல் தந்தையும் உயிரிழந்த சம்பவம் துன்னாலை வடக்கில் இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது. ஈஸ்வநாதன் யோகேஸ்வரி 23

## சமாதான உறவைப் பேண 42 கடிதங்கள் பிரபாகரனுக்கு எழுதினேன் – சந்திரிகா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சமாதான உறவைப் பேணுவதற்காக எனது ஆட்சிக் காலத்தில் 42 கடிதங்களைத் தான் பரிமாறியதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார 23

## யாழ் – சென்னை விமான சேவை நேற்று ஆரம்பம்
## வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் முதல் விமானத்தில் சென்னை சென்றார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சென்னைக்கான விமான சேவை நேற்று ஆரம்பமானது. மதவழிபாடுகளைத் தொடர்ந்து பயணிகள் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவதாக பயணித்த எயார் இந்தியா நிறுவனத்தின் AI 9 102 23

## சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகர இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் 23

## வெள்ளைவான் கடத்தல் விவகாரம் தொடர்பில் சி.ஐ.டி விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

**பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர**

(கொழும்பு)

அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில், வெள்ளை வாகன கடத்தல்களின்போது தான் சாரதியாக கடமையாற்றியதாக கூறி, பொதுமகன் ஒருவர் வழங்கிய பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் தொடர்பில் பூரண விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதானியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. 23

## கிளிநொச்சி மலையாளபுரத்தில் 3 வயது சிறுவன் பாம்பு தீண்டியதில் மரணம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மலையாளபுரத்தில், 3 வயது சிறுவன் பாம்பு தீண்டியதில் உயிரிழந்துள்ளான்.

குறித்த சிறுவன், இரவு உறங்குவதற்காக படுக்கை 23

## மக்களை எவரும் ஏமாற்ற முடியாது கோத்தபாய

(கொழும்பு)

நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் மிகவும் புத்திசாலியானவர்கள். ஆகை 23

## கிளிநொச்சியில் குடும்பப் பெண் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக

## குற்றப்பத்திரிகை தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட மற்றும் 13 பேருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டில் பதினொரு இளை ஞர்களைக் கடத்திய சம்பவம் தொடர்பாக இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள்



முன்வைக்கப்பட்டன. அதன் அடிப்படையில் நேற்று திங்கட்கிழமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கென ட்ரயல் அட்பார் விசாரணைக்குழுவை நியமிக்குமாறு சட்டமா அதிபர் டப்புள்ள டி லிவேரா பிரதம நீதியரசரை கோரியுள்ளார். 2008 - 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு மற்றும் சுற்றுப் புறங்களில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப் பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட விடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அண்மை யில் அறிக்கைகளை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


### வீடு விற்பனைக்கு

அளவெட்டி தெற்கில் 1 பரப்பு காணியுடன் 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு. (940)

தொடர்பு : 076 778 9492


# மும்மொழி கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மும் மொழி கற்கை நிலையத்தில் 2017 /2018ஆம் ஆண்டில் கற்கை நெறியை பூர்த்தி செய்தவர் களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும். வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், பிரதம விருந்தி னராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் க. பத்திநாதன் கலந்துகொள்வார். (ம)


### மணமகள் தேவை

1974ல் பிறந்த கௌரவ குடும்பம் திரு வாதிரை, செவ்வாய் 3ல் கி.பா 9 உயர் தொழில் புரியும் மணமகனுக்கு A/L படித்த 1980 பின் பிறந்த மணமகள் தேவை. (938)

தொடர்பு : 077 327 6500


# இராணுவத்திற்கு முன் ராஜபக்ஷவினர் மண்டியிட்டு மன்னிப்புக்கோர வேண்டும்

## அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

ராஜபக்ஷக்களின் ஆட்சியில் இராணுவத் தலைமையகத்தை வெளிநாட்டுக்கு விற்ற மைக்காக இந்த நாட்டு இராணுவத்திடம் மண்டியிட்டு அவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், பாதுகாப்புத்துறையில் நடைபெற்ற பாரிய மோசடிகள் அனைத்தும் ராஜபக்ஷக் கள் காலத்தில் நடைபெற்றதாக சுட்டிக்காட்டி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இரா ணுவ தலைமையகத்திற்கு சொந்தமான காணி சீனாவிற்கு விற்கப்பட்டமை ஊடக தேசிய நிதி 5 பில்லியன் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டினை எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ வினால் மறுக்க முடியுமா?

நல்லாட்சி அரசாங்கத்திலும் தேசிய நிதி மத்திய வங்கியின் பிணைமுறி கொடுக்கல் வாங்கல் ஊடாக இடம்பெற்றுள்ளது என்பதை ஒருபோதும் மறுக்கவில்லை.

கடந்த அரசாங்கம் போல மூடி மறைக்கவும் இல்லை. அரசாங்கம் அரச காணிகளை சர்வதேச நிறுவனங் களுக்கு வழங்குவதாக எதிர் தரப்பினர் குற் றஞ் சாட்டுகின் றார் கள்.

கடந்த நான்கரை வருட காலமாக ஒரு அங்குல காணியை கூட வெளிநாட்டு நிறு வனங்களுக்கு விற்க வில்லை. ஒப்பந்த அடிப் படையிலேயே காணி கள் குத்தகைக்கு வழங் கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் எதிர் தரப்பினரது போலி யான பிரசாரத்திற்கு ஏமாற்றமடையாமல் அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை முன்னெடுக்க வேண் டும்.

மேற் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள்தொடர் பில் எதிர்க்கட்சி தலை வர் மகிந்த ராஜபக்ஷ வின் சகாக்கள் கருத் துரைப்பது எவ்விதத் திலும் பொருத்த மற் றது.

ஆகவே அவரே மறுப்புக்களை தெரி விப் பதாயின் நேரடி யாக விவாதத்தினை முன்னெடுக்க வேண் டும். ஆதாரங்களுக் கான ஆவணங்களை பகிரங்கப்படுத்த தயார் என கூறினார். (ம-3)


### மரணஅறிவித்தல்

## சிவகுரு சின்னப்பிள்ளை

பிறப்பு :- 01.05.1925 இறப்பு :- 11.11.2019



மீசாலை கிழக்கைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சின்னப் பிள்ளை 11.11.2019 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருவின் அன்பு மனைவி யும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, சின்னம்மா, லட்சுமி ஆகி யோரின் அன்புச் சகோதரியும் கனகசபை (கிளி - அமரர்), இராசேஸ்வரி (தேவி), குலசேகரம் (கண்டு), பேரின்பநாதன் (சோமு - லண்டன்), புனிதவதி (குஞ்சு), பவளம் (வேவி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிறிமுருகன், சுபாஸ்கரன், சுரேஸ்காந்தன், துஸ்யந்தி, கிரிசா, வளர்மதி, பகீரதன்(அமரர்), லோகேஸ்வரன் (அமரர்), பாஸ்கரன் (லண்டன்), திசாந்தினி, முகுந்தன், சுகந்தன், பிரசாந்தினி, டர்மினி, நிதர்சன், பானுசா ஆகியோரின் பேர்த்தியும் சாருகா, சஞ்சிகா, வர்சிகா, லக்சன், சகானன், பர்மிசா, தனுசன், தனுசிகன், தசானி, தஸ்மிகா, நிலோசன், டிசான், கோபிசன், லயனிகா, லதுசனா, குவிந்தன், சஞ்சுதன், அஸ்விகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2019) புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு, மீசாலை, (C-8198) தகவல் :- குடும்பத்தினர்.



### உடன் தேவை

கணனியில் தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்யக் கூடிய ஆண், பெண் இருபாலாரும் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் நேரில் பேசித் தீர் மானிக்கப்படும். மற்றும் போட்டோக்கொப்பி செய்யக் கூடியவர்களும் பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளவும். அருகில் உள்ளவர் கள் விரும்பத்தக்கது.

(மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்) (C-8203)

இராமநாதன் வீதி, திருநெல்வேலி. (யாழ்.பல்கலைக்கழக அருகாமை) தொ.பே.இல: 077 952 2444



### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்
**திரு.செல்லையா யோகேஸ்வரன்**
அவர்களின் பாசமிகு தாயார்
**செல்லையா தங்கம்மா**
அவர்கள் நேற்று முன்தினம் (10.11.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.



(C-8204)

பாடசாலைச் சமூகம் மு/சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்





### இலங்கை ஜனாதிபதித் தேர்தல் - 2019

**"தமிழ்த் தேசிய இனத்தின் மறுமலர்ச்சிக்கான மக்கள் சக்தி"**

வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ்த் தேசிய இனத்தின் பொது வேட்பாளர் **எம்.கே.சிவாஜிலிங்கம்**

ஒற்றை ஆட்சியை நிராகரிப்போம் ! இலங்கை சிங்கள, பௌத்த நாடு அல்ல என்பதை உரக்கக் கூறுவோம் !!
தமிழ் இனப் படுகொலைக்கு நீதி கோருவோம் !
சிங்கள தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் ஒரு தெளிவான செய்தியைத் தெரிவிப்போம்.
சுதந்திரம் எமது பிறப்புரிமை ! சுயாட்சி எமது கோரிக்கை !!

(C-1009)

**எம்.கே.சிவாஜிலிங்கம்**



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

"கொள்கையை தெளிவுபடுத்தத் தெரியாதவர்கள் என் மீது போலிக் குற்றச்சாட்டு"

# தவறான அரசியல் கலாசாரத்தை முழுமையாக இல்லாதொழிப்பேன்

## கோத்தபாய திட்டவட்டம்



(தம்புத்தேகம)

**கொ**ள்கைப் பிரகடனத்தை தெளிவுபடுத்தி மக்கள் மத்தியில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள முடியாதவர்கள் இன்று என் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர் எனத் தெரிவித்த பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தவறான அரசியல் கலாசாரத்தை முழுமையாக இல்லாதொழிப்பேன் எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை எவ்வாறு முன்னேற்றுவது என்பது தொடர்பான கொள்கைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டதாகவே எனது தேர்தல் பிரசாரங்கள் காணப்படுகின்றன.

ஆனால் ஆளும் தரப்பினர் ஆரம்பத்திலிருந்து இன்று வரை பிறரை குறிப்பாக என்னை விமர்சித்தே பிரசாரங்களை முன்னெடுக்கின்றார்கள்.

அபிவிருத்தி தொடர்பான கொள்கைத் திட்டங்களை இது வரையில் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தவில்லை.

நாட்டில் தவறான அரசியல் கலாசாரங்களே காணப்படுகின்றன. இந்தக் கலாசாரம் முழுமையாக மாற்றியமைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அநுராதபுரம்- தம்புத்தேகம நகரில் நேற்று முன்தினம் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கொலைக்குற்றவாளிக்கு பொது மன்னிப்பு; மைத்திரியின் முடிவுக்கு அநுர கண்டனம்

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ரோயல் பார்க் கொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட மரண தண்டனைக் கைதிக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கான ஜனாதிபதி மைத்திரியின் முடிவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க கண்டனம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கையொன்றை நேற்று திங்கட்கிழமை வெளியிட்ட தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார சட்டவிரோத மற்றும் நியாயமற்ற முடிவு, நீதித்துறை மீது பொது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் புறக்கணித்துவிட்டது எனக் கூறியுள்ளார்.

மேலும் செல்வந்த வர்க்கத்தால் கட்டுப்படுத்தப்படும் ஒரு ஊழல் அரசியலமைப்பு என்றும் இரு சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளை சவாலுக்குட்படுத்துவதாகவும் அநுரகுமார தனது அறிக்கையில் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு நாட்டில் ஒழுக்கமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் சட்ட விதி ஒரு முக்கியமான தூணாகும் என்று தான் நம்புவதாகவும் எனவே ஜனாதி பதி தனது முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இந்த விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலையீட்டையும் கோரியுள்ளார்.

ராஜகிரியவில் உள்ள ரோயல் பார்க் வீட்டு வளாகத்தில், யுவோன் ஜோன்சன் என்ற 19 வயது யுவதியொருவர் ரோயல் பார்க் என்ற அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து கீழே



தள்ளி விழுத்தி கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட யுவதியின் சகோதரியின் காதலன் ஜூட் ஶ்ரீமந்த என்டனி ஜயமஹவே இந்தக் கொலையைச் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு 12 வருடகால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இதனை அடுத்து குற்றவாளி சார்பாக மேன்முறையீடு செய்யப்பட்ட போதும் அவருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரி குறித்த மரணதண்டனை குற்றவாளிக்கு பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வதாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெள்ளைவான் கடத்தல் குறித்து வெளிவரும் அதிர்ச்சித் தகவல்கள்

## மகிந்த தரப்பு நிராகரிப்பு



(கொழும்பு)

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெறுவார் என்ற அச்சத்திலேயே அவர் மீதான பொய்க்குற்றச்சாட்டுக்களை சுமத்துவதாக மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் ராஜித சேனாரட்னவின் தலைமையில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற வெள்ளை வான் கடத்தல் விவகாரத்தின் பிரதான சூத்திரதாரியாகச் செயற்பட்டவர் கோத்தபாய ராஜபக்ஷவே என்றும் சுமார் 300 பேர் வரையில் கடத்தப்பட்டு சித்திரவதைகளுக்கு உட்படுத்தி கொல்லப்பட்டுள்ளதாகவும் வெள்ளை வான் ஒன்றின் சாரதியாகப் பணியாற்றியதாகக் கூறப்படும் ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் இந்த விடயம் குறித்து நேற்று கருத்து வெளியிட்ட மகிந்தானந்த அளுத்கமகே மேற்படி குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார்.

மேலும் வெள்ளைவான் கடத்தல் தொடர்பான தகவல்கள் அறிந்ததும் அமைச்சர் ராஜித சேனாரட்ன குறித்த சந்தேகநபரை பொலிஸில் ஒப்படைத்திருக்க வேண்டுமென்றும் அதைவிடுத்து இவ்வாறு ஊடக சந்திப்பை நடத்தியிருக்கக் கூடாதென்றும் அவர் தெரிவித்தார். (இ-7)


13 அம்சக்கோரிக்கைகளை வெற்றிபெறச்செய்வோம்

ஜனாதிபதித் தேர்தல் - 2019



தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்

முச்சக்கர வண்டிக்கு வாக்களிக்கவும்

ஐக்கிய சோசலிசக் கட்சி



X

சிறிதுங்க ஜெயசூரியவை வெற்றிபெறச் செய்வோம்

என் மகன் ஒரு லட்சம் பந்துகளை வீசியிருப்பான்

# ஹட்ரிக் விக்கெட் எடுத்த சாஹரின் தந்தை நெகிழ்ச்சி

சாதனை ஹட்ரிக்கிற்கு முன்பாக சுமார் 1 லட்சம் பந்துகளை என் மகன் வீசியிருப்பான் என்று ஹட்ரிக் நாயகன் தீபக் சாஹரின் தந்தை லோகேந்திர சிங் சாஹர் நெகிழ்ச்சியுடன் தன் மகன் பற்றி தெரிவித்துள்ளார்.

தீபக் சாஹரின் தந்தை லோகேந்திர சிங் கூறியதாவது, "நாங்கள் இருவருமே வளர்த்தெடுத்த கனவு தற்போது நினைவாகியுள்ளது என்றே நான் உணர்கிறேன்" என்றார்.

24 மணி நேரம் பயிற்சிக்குப் போதவில்லை. பயிற்சி, உடல் பயிற்சி, ஓய்வு, மீண்டும் பயிற்சி என்று சென்று கொண்டிருந்தது, ஆனாலும் பட்டப்படிப்பை எப்படியோ முடித்து விட்டான் தீபக்கிற்கு 27 வயது ஆகிறது இன்னும் 6-7 ஆண்டுகள் கிரிக்கெட் உச்சக் காலக்கட்டம் மீதமுள்ளது. டெஸ்ட் போட்டியில் ஆடுவதை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். கிரிக்கெட்டின் மரபான வடிவத்தில் என் மகன் ஆடுவதைப் பார்க்க மிகுந்த ஆவலுடன் இருக்கிறேன்" என்றார் லோகேந்திர சிங்


# நியூசிலாந்திற்கு எதிராக சதம் விளாசி தரவரிசையில் முன்னேறிய தாவித் மலன்

9 பவுண்டரி, 6 சிக்சர்களுடன் 51 பந்தில் 103 ரன்கள் குவித்ததன் மூலம் ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் 3-வது இடத்திற்கு முன்னேறினார் தாவித் மலன்.

நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட டி20 கிரிக்கெட் தொடர் நடைபெற்றது. கடந்த 8-ந்தேதி நடைபெற்ற 4-வது டி20 கிரிக்கெட் போட்டியில் தாவித் மலன் அதிரடியாக விளையாடி 48 பந்தில் 9 பவுண்டரி, 6 சிக்சர்களுடன் சதம் விளாசினார்.

டி20 கிரிக்கெட்டில் இங்கிலாந்து வீரரின் அதிரடி சதம் இதுவாகும். இந்த சதம் மூலம் ஐசிசி டி20 பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் தாவித் மலன் 782 புள்ளிகளுடன் 3-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

பாகிஸ்தான் கேப்டன் பாபர் அசாம் 876 புள்ளிகளுடன் முதல் இடத்தில் நீடிக்கிறார்.




பாகிஸ்தான் சுப்பர் லீக்

# ஏலத்தில் இருந்து விலகினார் நட்சத்திர வீரர் ஏ.பி.டி.வில்லியர்ஸ்

பாகிஸ்தான் சூப்பர் லீக்கில் விளையாடிய தென்ஆபிரிக்கா முன்னாள் வீர ஏபி டி வில்லியர்ஸ் வீரர்கள் ஏல பட்டியலில் இருந்து விலகியுள்ளார்.

தென்ஆபிரிக்கா அணியின் முன்னணி அதிரடி பேட்ஸ்மேனாக திகழ்ந்தவர் ஏபி டி வில்லியர்ஸ். சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடும்போது ஐபிஎல் உட்பட ஒன்றிரண்டு டி20 லீக்கில்தான் விளையாடினார்.

சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றபின் பல்வேறு டி20 லீக்கில் விளையாட முடிவு செய்தார். அதன்படிதான் இந்த ஆண்டு முடிவடைந்த பாகிஸ்தான் சூப்பர் லீக்கில் லாகூர் குவாலண்டர்ஸ் அணிக்காக விளையாடினார்.

7 போட்டிகளில் விளையாடிய பின் காயத்தால் வெளியேறினார். 7 போட்டியில் ஒரு அரைசதத்துடன் 218 ரன்கள் சேர்த்தார். அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் தொடருக்கான வீரர்கள் ஏலம் அடுத்த




மாதம் நடைபெற இருக்கிறது. இந்த ஏல பட்டியலில் இருந்து ஏபி டி வில்லியர்ஸ் விலக முடிவு செய்துள்ளார்.

அடுத்த வருடம் நடைபெறும் பாகிஸ்தான் சூப்பர் லீக்கின் அனைத்து போட்டிகளும் பாகிஸ்தானில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏபி டி வில்லியர்ஸ் இந்த முடிவை எடுத்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆட்டம் பற்றிய நுண் அறிதிறன் இல்லை தோல்வி குறித்து மனம் திறந்தார் மகமதுல்லா

நாக்பூர் டி20 போட்டியில் தீபக் சாஹரின் வரலாற்று ஹாட்ரிக் சாதனையில் இந்திய அணி வங்கதேசத்தை 30 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி தொடரை 2-1 என்று கைப்பற்றியது.

வங்கதேச அணி மொகமட் நயீமின் அதியற்புத 81 ரன்களினால் 110/2 என்று 13 ஓவர்கள் முடிவில் வலுவாக இருந்தது. ஆனால் கடைசி 8 விக்கெட்டுகளை 6.2 ஓவர்களில் 34 ரன்களுக்கு இழந்து வெற்றியை இந்திய அணிக்குத் தாரை வார்த்தது. உலக சாதனையான 7 ரன்களுக்கு 6 விக்கெட்டைக் கைப்பற்றிய தீபக் சாஹர் டி20 சர்வதேச போட்டியில் ஹாட்ரிக் சாதனை நிகழ்த்திய முதல் இந்திய பவுலர் ஆனார்.

இந்நிலையில் வங்கதேச கேப்டன் மஹமுதுல்லா கூறியதாவது:

30 பந்துகளில் 50 ரன்கள் தேவை என்ற நிலையில் எங்களுக்கு வெற்றி வாய்ப்பு இருந்தது. ஆனால் அவசரம் அவசரமாக விக்கெட்டுகளை இழந்தோம். டி20 கிரிக்கெட்டில் உத்வேகத்தை இழந்து விட்டால் மீட்பது கடினம். நான் ஏற்கெனவே கூறியது போல் நாங்கள் வெற்றிக்கு நெருக்கமாகவே வந்தோம். 6-7 பந்துகளில் 3-4 விக்கெட்டுகளை இழந்து விட்டோம். இப்படிப்பட்ட தவறு களை திரும்பத் திரும்பச் செய்ய முடியாது என்றார்.

# விராட் கோலி போல் வர ஆசைப்படும் வோர்னரின் மகள்




ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் டேவிட் வார்னர், தனது மகள் கிரிக்கெட் விளையாடும் வீடியோவை பதிவிட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அதிரடியான தொடக்க ஆட்டக்காரர் டேவிட் வார்னர். இவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். டேவிட் வார்னர்நேற்று தனது வீட்டில் தனது 3 வயது மகளுடன் கிரிக்கெட் விளையாடினார். இது தொடர்பான வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்த வீடியோவில் டேவிட் வார்னரின் மகள் இன்டி மே, நான் விராட் கோலி என்று கூறிவிட்டு பந்தை அடிக்கும் போல் காட்சி பதிவாகியுள்ளது. அதேபோல தனது தந்தை டேவிட் வார்னரை போல் விளையாடியும் காட்டுகிறார். இந்த வீடியோவை டேவிட் வார்னர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டு, "எனக்கு இது பற்றி சரியாக தெரியாது. இன்டி விராட் கோலி போல் ஆக வேண்டுமாம்" என எழுதியுள்ளார். இந்த வீடியோ இன்ஸ்டாகிராமில் அதிக லைக்ஸ் பெற்று வருகிறது.


# 7 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்கள்; வரலாற்றுச் சாதனையாளரானார் சாஹர்

வங்காளதேச அணிக்கெதிரான போட்டியில் 7 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுக்கள் கைப்பற்றிய தீபக் சாஹர் வரலாற்று சாதனைப் படைத்துள்ளார்.

இந்தியா - வங்காளதேசம் அணிகளுக்கு இடையிலான 3-வது மற்றும் கடைசி டி20 போட்டி நாக்பூரில் நேற்று முன்தினம்நடைபெற்றது. முதலில் பேட்டிங் செய்த இந்தியா 174 ரன்கள் குவித்தது.

பின்னர் 175 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காளதேசம் பேட்டிங் செய்தது. அந்த அணி ஒரு கட்டத்தில் 12.5 ஓவரில் 110 ரன்கள் எடுத்திருந்தது. வெற்றிக்கு 43 பந்தில் 65 ரன்களே தேவைப்பட்டது.

தீபக் சாஹர் வீசிய 13-வது ஓவரில் கடைசிப் பந்தில் முகமது மிதுன் ஆட்டமிழந்தார். இதுதான் போட்டியின் திருப்புமுனையாக அமைந்தது. மேலும், இறுதிக் கட்டத்தில் ஹட்ரிக் விக்கெட்



வீழ்த்தி வங்காளதேசம் அணியை 144 ரன்னில் ஆல்அவுட் ஆக்கினார்.

மற்ற பந்து வீச்சாளர்கள் ரன்களை கொடுத்தாலும் தீபக் சாஹர் கட்டுக்கோப்பாக பந்து வீசி 3.2 ஓவரில் 7 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுக்கள் சாய்த்தார்.

இதன்மூலம் டி20 கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த ரன்கள் விட்டுக் கொடுத்து அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய வீரர் என்ற பெருமைய பெற்றுள்ளார்.

# யாழ். சர்வதேச விமான நிலையம் ஊடாக வடக்கு ஆளுநர் ராகவன் சென்னை பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் சென்னை நகரத்திற்கு முதலாவதாக பயணித்த எயார் இந்தியா நிறுவனத்தின் AL 9 102 பயணிகள் விமானத்தில் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்றுப் பயணித்தார்.





இரு நாடுகளுக்குமிடையில் புதிய உறவுகளையும் புதிய வர்த்தக தொடர்புகளையும் இந்த விமான நிலையத்தினூடாக உருவாக்க முடியும் என்று எதிர்பார்ப்பதாக ஆளுநர் இந்தப் பயணத்தின் போது தெரிவித்தார். (இ-5-7)

## ஆறு நாடுகளைச் சேர்ந்த

# மேலும் சில கண்காணிப்பாளர்கள் இன்றும் நாளையும் இலங்கை வருகை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க மேலும் சில வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க வருகை தருமாறு தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்த அழைப்பை ஏற்று அவர்கள் இன்றும் நாளையும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

அதற்கமைய ஆறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 14 கண்காணிப்பாளர்கள் நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்தார்.

இந்தியா, இந்தோனேசியா, மாலைதீவு, தென்னாபிரிக்கா, பூட்டான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களே இவ்வாறு நாட்டுக்கு வருகை தரவுள்ளனர்.

இவர்கள் மீதமாகவுள்ள தேர்தல் தொடர்பான கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதுடன், தேர்தல் குறித்த ஆய்வுப் பணிகளையும் முன்னெடுக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கண்காணிப்புப் பணிகளை முன்னெடுக்க இதுவரை ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சர்வதேச கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அவர்கள் தற்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பூர்வாங்க கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனரென்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையை அச்சுறுத்திய தூசு துகள்களின் செறிவு குறித்து முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட பல நகரங்களின் வளிமண்டலத்தில் ஏற்பட்டிருந்த தூசு துகள்களின் செறிவு தற்போது சீரடைந்திருப்பதாக, மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வடக்கு திசையில் இருந்து வீசிய காற்று காரணமாக இலங்கையின் வளிமண்டலத்தில் தூசு துகள்கள் அதிகரித்தன.

இலங்கையின் வளி தர குறியீடு 150 வரையில் அதிகரித்திருந்ததாகக் கூறப்பட்டது. இந்நிலையில், தற்போது இந்த நிலைமை சீரடைந்தது.

இந்தியாவின் தலைநகர் டில்லியில் ஏற்பட்டிருந்த காற்று மாசுவினாலேயே இலங்கையில் இந்த நிலைமை ஏற்பட்டது என்று கூறுவதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்றும் அந்த அதிகார சபை மேலும் தெரிவித்தது. (இ-7)




# புலனாய்வாளர்கள் அச்சுறுத்தல்!

## சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

திருகோணமலையில் இடம் பெற்ற எனது தேர்தல் அறிக்கை வெளியீட்டு கூட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர்களை புலனாய்வாளர்கள் கடுமையாக அச்சுறுத்தியதாக ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் குற்றம் சாட்டினர். சாவகச்சேரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது தேர்தல் அறிக்கைப் பிரகடன வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொள்ள 1500இற்கும் மேற்பட்டவர்கள் விருப்பம் தெரிவித்திருந்தனர். அதனால் திருகோணமலை மாத்திரம் அன்றி மட்டக்களப்பு மற்றும் அம்பாற மாவட்டங்களில் இருந்தும் நிகழ்விற்கு பொதுமக்கள் வர போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்திருந்தோம். ஆனால் போக்குவரத்து ஒருங்கிணைப்புக்களை மேற்கொண்ட பல ஒருங்கிணைப்பாளர்கள் புலனாய்வாளர்களால் மிகக் கடுமையாக மிரட்டப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் பலருக்கும் தொலைபேசி அழைப்பு எடுக்கப்பட்டு கூட்டத்திற்கு செல்லக் கூடாது என அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது. இதனால் தேர்தல் அறிக்கை வெளியீட்டுக் கூட்டத்திற்கு 300 பேர் மாத்திரமே வருகை தந்திருந்தனர். சஜித் பிரேமதாஸ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷவின் பிரசாரக் கூட்டத்திற்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் கூட்டம் நடைபெறுகின்ற இடங்களில் சுவரொட்டிகளால் அலங்கரிப்புச் செய்ய முடியும். ஆனால் நாங்கள் கூட்ட இடத்திற்கு கொண்டு செல்லவிருந்த சுவரொட்டிகளைப் பொலிஸார் பறித்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

## சின்னம் சூட்டலும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் இன்றறக்ட் கழகத்தின் புதிய தலைவர் பதவியேற்பும், கழகத்தில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் 'சுரபி' நூல் வெளியீட்டு விழாவும் இன்று 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இன்றறக்ட் கழகத் தலைவர் எஸ்.திருச்செந்தூரன் தலைமையில் அதிபர்.ம.ஞான சம்பந்தன் முன்னிலையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் டாக்டர் அ.ஜெயகுமரன் கலந்து கொள்வார். (இ-5)

# உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

## சதயம் நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

அதிர்ஷ்ட ஜோதிடம்

சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய இராசி-கும்பம் ஆகும். கும்பத்தின் அதிபதி சனி ஆவார். அதன் சின்னம்-கும்பம் சுமந்த புருஷன் ஆகும். சதயம் நட்சத்திரத்தின் அதிபதி-ராகு ஆவார். அதன் சின்னம்-பெண் குதிரையாகும். எனவே இவர்களிடம் அதிக முன்கோபமும் பிடிவாதமும் உண்டு. வஞ்சகம், சூது, பொறாமை, கபடம் போன்ற குணங்களும் உண்டு. அதேசமயம் பிறருக்கு உதவி செய்யக் கூடிய தர்மசிந்தனையும் உண்டு. இவர்கள் நல்லவனுக்கு நல்லவன். கெட்டவனுக்குக் கெட்டவன் என்ற கொள்கை புத்தியும் இவர்களிடம் உண்டு. நீதி, நேர்மை தவறாது செயற்படக் கூடிய குணமும் சிலரிடம் உண்டு. பணம் சம்பாதிப்பதிலும் அதைச் சேர்த்து வைப்பதிலும் இவர்கள் கெட்டிக்காரர்களாகத் திகழ்வார்கள். மக்களைத் தன் பக்கம் ஈர்க்கும் வண்ணம் ஏமாற்றிப் பேசக் கூடிய ஆற்றலும் இவர்களிடம் உண்டு.

தனது- தாய், தந்தையர் மீது இவர்கள் பாசமாக இருப்பார்கள்.ஓரளவு நல்ல தெய்வ பக்தியும் உண்டு. சகோதர பாசம் இவர்களிடம் சுமாராகவே இருக்கக் கூடும். கல்வியில் கெட்டிக்காரர்கள். நன்றாக படித்து பட்டம் பெறக் கூடிய யோகமும் இவர்களுக்கு உண்டு. சுமாரன அழகுடன் காட்சியளிப்பார்கள். மாநிறமுடையவர்கள். இரும்பு, கரண்ட், நெருப்பு, மெக்கானிக்கல் ஹோட்டல் சம்பந்தமான தொழில் செய்து இவர்கள் ஜீவனம் நடத்த நேரிடும். சிலர் அடிமைத் தொழில் செய்வர். சிலர் கூலி வேலை, முரட்டு வேலை செய்து காலம் தள்ள நேரிடும். தன் குழந்தைகள் மீது இவர்கள் பாசமாக இருப்பார்கள். இவர்களது இல் வாழ்வில் சிறு சிறு சண்டை சச்சரவுகள் வந்து விலகும். சளித் தொல்லை, தலைவலி, சுரம், நெஞ்சுவலி, கால்வலி, முதுகுவலி போன்ற நோய்கள் இடை இடையே வந்து விலகும். இவர்களிடம் மந்த புத்தியும் உண்டு. அதேசமயம் நல்ல நேரம் வரும் போது சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய சக்தியும் உண்டு. நினைத்ததைச் சாதிக்கக்கூடிய மன வல்லமையும் இவர்களிடம் உண்டு. எதிரியை வெல்லக் கூடிய சக்தியும் உண்டு. பழிவாங்கும் சுபாவமும் இவர்களிடம் உண்டு.

## சஜித்திற்கு ஆதரவாக சங்கிலியன் பூங்காவில் கூட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு; சம்பந்தன் சிறப்புரை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம் நாளை 13 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெறும்.

இப் பிரசாரக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சி தலைவர்கள் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சிறப்புரையாற்றுவார். (இ-5-7)



இலங்கை மதுவரித் திணைக்களத்தின் வடமாகாண உதவி மதுவரி ஆணையாளர் காரியாலயத்தின் ஏற்பாட்டில் வினைத்திறன் மிக்க அரச உத்தியோகத்தர்களாக மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளிலான பயிற்சியுடன் கூடிய நிகழ்ச்சித்திட்டம் கடந்த 8 ஆம் திகதி யாழ்.பொதுநூலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் மற்றும் இலங்கை மதுவரித் திணைக்கள உயர் அதிகாரிகள், வடமாகாண உதவி மதுவரி ஆணையாளர் அலுவலக அதிகாரிகள், மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இராசி பலன்

**மீனம்** – பொதுவாழ்வில் பாராட்டும் புகழும கூடும் நாள், வருங் கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள்,வார்த்தைகளில் நிதானம் தேவை, பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

**மேடம்** – குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், போசன சுகமுண்டு.

**இடபம்** – பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** – குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,போசன சுகமுண்டு.

**கும்பம்** – தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, வேலையில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| | சந் | | ராகு |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் சித்திரை,சுவாதி | | |
| சனி, குரு, கேது | சுக். | சூரி, புத. | செவ் |

12.11.2019
ஐப்பசி 26,செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பூரணை முன்னிரவு 8.04 மணிவரை
பரணி முன்னிரவு 10.15 மணிவரை
சுபநேரம்- 10.36-12.06 மணிவரை
இராகுகாலம்-3.06-4.36 மணிவரை
ஐப்பசி பரணி,பூரணை விரதம்

வளவன்

**கடகம்** – கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**மகரம்** – பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலம், உறவினர்கள் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூற லாம், முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்** – உங்களோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்; சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**தனுசு** – எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்தி சாதுரியமாக செயற்பட்டு முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** – பணத் தேவைகள் பூர்த்தியாகும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பகைவர்கள் விலகுவர், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** – நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறலாம், செல்லும் இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** – மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், தேவையற்ற மனஸ் தாபங்கள் ஏற்படலாம், ஒருவகையில் வந்த வரவுகள் இன்னொரு வகையில் விரயமாகலாம், திருடர் பயமுண்டு.

## காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

# நிதியுமில்லை! நீதியுமில்லை!

## சந்திரிகா முன் தாய் ஒருவர் ஆதங்கம்





(யாழ்ப்பாணம்)

**காணாமல்போன எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? எமக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. அரசாங்கத்தால் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட இழப்பீட்டு நிதியும் கிடைக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதியும் நல்லிணக்கச் செயலணியின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்பாக தமிழ்த்தாய் ஒருவர் தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.**

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்த நிலையில் எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? என இதுவரை அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை.

காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்காக அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட பணியகத்தின் சிபாரிசில் இழப்பீடுகள் வழங்கப்படும் என அறிவித்தும் இதுவரை எமக்கு எந்த விதமான இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை.

யுத்தத்தால் கணவனை இழ் நந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கை மேம்படுத்தப்படவில்லை. அத்தோடு குடும்பத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

யுத்தத்தால் இழப்புக்களை சந்தித்த குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அரச வேலை வாய்ப்பும் ஓய்வூதியத் திட்டங்களும் வழங்கப்பட வேண்டும் என பல கோரிக்கைகளை குறித்த தாய் சந்திரிகா முன்னிலையில் வாய்மொழி மூலமும் எழுத்து மூலமும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு

# அரச,தனியார் துறை ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது.

இதேவேளை எவ்வாறு விடுமுறை வழங்குவது என்பது தொடர்பிலும் தேர்தஷ்கள் ஆணைக்குழு பரிந்துரைத்தது.

அதற்கமைய 40 கிலோ மீற்றர் தூரத்திற்குட்பட்ட வாக்காளர்களுக்கு அரை நாள் விடுமுறையும், 100 கிலோமீற்றர் தூரத்திற்குட்பட்டவர்களுக்கு ஒருநாள் விடுமுறையும், 100 முதல் 150 கிலோ மீற்றர் தூரத்திற்குட்பட்ட வாக்காளர்களுக்கு ஒன்றரை நாள் விடுமுறையும், 150 கிலோ மீற்றர் தூரத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களுக்கு இரு நாள் விடுமுறையும் பரிந்துரை செய்யப்பட்டது.

எதிர்வரும் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாறு விடுமுறை தொடர்பான விசேட அறிவித்தல் வெளியிடப்பட்டது. (இ-7)

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் நிறுத்தப்பட்ட வாகனங்கள் தீக்கிரை

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கொழும்பில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோ மற்றும் 47 மோட்டார் சைக்கிள்களே இவ்வாறு தீ பரவியதில் எரிந்து நாசமாகியுள்ளனவென தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (இ-7)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: செவ் 1 இல் உயரம்: 6'3"<br>தகைமை/தொழில்B.Sc, M.Sc, Analyst, America<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: B/10223 | பிறப்பு: 1989 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 21 ½ செவ் 1 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:MA, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகத்தர் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: G/10238 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 50 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் (உள்நாடு)<br>தொ.இ: B/10224 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் 4<br>கி.பா: 30 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:கலைபட்டதாரி, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: Engineer, Doctor, IT(உள்நாடு)<br>தொ.இ: G/10240 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 63 ¼ செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L, Hotel Management<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/10225 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:HND in Electrical Engineering<br>எதிர்பார்ப்பு: உத்தியோகத்தர் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: G/10243 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:BBM, Accountant<br>எதிர்பார்ப்பு: பட்டதாரிஆசிரியர்,வங்கி<br>தொ.இ: B/10227 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 12 ½ செவ் 8 இல்<br>உயரம்: 164cm<br>தகைமை/தொழில்:B.Sc,விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: G/10245 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## மன். ஆயரை சந்தித்த மகிந்த



பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரித்து நேற்று முன்தினம் மன்னாரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொள்ள மன்னார் சென்ற முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சி தலைவருமான மகிந்த ராஜபக்ஷ மன்னார் ஆயர் இல்லத்திற்கு சென்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடினார். (9-285)

## புளியங்குளம் வைத்தியசாலை வைத்தியரை தாக்க முயற்சி

### வைத்திய சேவைகள் முடக்கம்

(நெளுக்குளம்)

வவுனியா புளியங்குளத்தில் பிரதேச வைத்தியசாலை வைத்தியரை ஒருவர் தாக்க முயற்சித்தமையினால் புளியங்குளம் வைத்தியசாலையின் வைத்திய சேவைகள் முடங்கியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இரவு புளியங்குளம் வைத்தியசாலையில் கடமை புரியும் பெண் வைத்தியரை இனந்தெரியாத ஒருவர் தாக்க முயற்சித்துள்ளார். இதன் காரணமாக அச்சமடைந்த வைத்தியர் கூக்குரல் எழுப்பவே அவர் தப்பியோடியுள்ளார். கடந்த சில நாட்களுக்கு முன்னரும் புளியங்குளம் வைத்தியசாலையில் வைத்தியருடன் சிலர் முரண்பட்டு தாக்க முற்பட்ட நிலையில் பொலிஸார் அவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பின்னர் பிணையில் விடுவித்திருந்தனர். இந்நிலையில் வியாழக்கிழமையும் வைத்தியர் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டமையினால் குறித்த வைத்தியர் தொடர்ந்தும் அங்கு பணியாற்ற அச்சுறுத்தல் உள்ளமையினால் புளியங்குளம் வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா மாவட்ட பிரதிநிதிகளிடம் கேட்டபோது வைத்தியர் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ள முற்பட்டமையினால் வைத்தியரை நாம் அங்கு கடமையாற்றுவதில் இருந்து வெளியேற்றியுள்ளோம்.

நாம் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டு வைத்திய சேவையை புளியங்குளத்தில் மேற்கொள்ளாதுள்ளோம். எதிர்வரும் காலங்களில் அச்சுறுத்தல் நிலைமைகள் தொடராது என்பதனை எமக்கு உறுதிப்படுத்த வேண்டும். அதன் பின்னரே சேவைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவித்துள்ளனர். (9-299)

## சமாதான நீதவான்கள் மாநாடு



இலங்கை சமாதான நீதவான்கள் பேரவையின் சுபீட்சமான இலங்கை எனும் தலைப்பில் வடமாகாணத்திற்கான மாநாடு கடந்த சனிக்கிழமை வவுனியா அருந்ததி லக்சரி மண்டபத்தில் பேரவையின் தேசிய பணிப்பாளர் கலாநிதி பஹத் ஏ.மஜீத் தலைமையில் இடம்பெற்றது.

இன ஐக்கியம், சமாதானம், மனித உரிமை, நீதி என்பனவற்றை காக்கும் நோக்கில் செயற்பட்டு வரும் பேரவையின் மாகாண ரீதியிலான மூன்றாவது மாநாடு இதுவாகும்.

இந்த நிகழ்வில் கடந்த காலங்களில் வடக்கு மற்றும் கிழக்கில் சமாதானப் பணிகளுக்காக தங்களை அர்ப்பணித்த சமாதான நீதவான்களுக்கு நிகழ்வில் சிறப்பு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (9)

## முல்லைத்தீவில் 107 பேருக்கு டெங்கு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 107 வரையான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் டெங்கு நோயின் தாக்கம் காணப்படுகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் தாக்கம் தொடர்பில் மேற்படி சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, முல்லைத்தீவு மாவட்டத்தில் இக் காலப்பகுதியில் 107 வரையான நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட டெங்கு நோயாளர்கள் கொழும்பு மற்றும் வெளிமாவட்டங்களுக்கு தொழில் நிமித்தம் சென்று வந்தவர்கள் அல்லது வெளிமாவட்டங்களிலிருந்து வந்தவர்களாவே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளதுடன், கடந்த ஆண்டில் நூறு பேர் வரையிலும் 2017 ஆம் ஆண்டில் 170 இற்கும் மேற்பட்டோர் இனங்காணப்பட்டும் சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் மேற்படி பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தற்போது டெங்கு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் தேசிய வனரோபா நிகழ்ச்சித் திட்டம் கடந்த வாரம் கல்லூரி முதல்வர் கி.விக்னராஜா தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.க.அபிராமி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளர் து.சுபோகரன், கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். குறித்த நிகழ்வில் கல்லூரி சுற்றாடல் முன்னோடிப் பாடசாலையாக பிரகடனப்படுத்தப்பட்ட துடன் அதற்கான பெயர்ப்பலகை திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து 250 இற்கு மேற்பட்ட புங்கை மரங்களும் நாட்டப்பட்டன.

## கோரிக்கைகளை ஏற்றதால் சஜித்திற்கு ஆதரவு

### ஈரோஸ் ஜனநாயக முன்னணி அறிவிப்பு



ஜனாதிபதி தேர்தலில் அன்ன சின்னத்தில் பொது வேட்பாளராக களம் இறங்கும் சஜித் பிரேமதாஸ எமது இருபது அம்சக் கோரிக்கைகளை ஏற்று சாதகமாக பதில் வழங்கியதால் அவருக்கு தமது முழு ஆதரவை வழங்குவதாக ஈரோஸ்ஜனநாயக முன்னணியின் வடமாகாண இணைச் செயலாளர் அருளப்பு இராசநாயகம் தெரிவித்துள்ளார்

ஐக்கிய தேசிய கட்சியின் மன்னார் மாவட்ட காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் சஜித்பிரேமதாஸவை கடந்த மாதம் 18 ஆம் திகதி சந்தித்து 20 அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தோம். அந்த கோரிக்கைகளுக்கு சஜித் பிரேமதாஸ அளித்த பதில்கள் சாதகமாகவும் எமக்கு திருப்தி அழிக்கக் கூடியதாகவும் இருந்தமையினால் நாங்கள் எமது மத்திய குழுவுடன் ஆலோசித்து அவருக்கு ஆதரவு அளிக்க முடிவெடுத்துள்ளோம் என தெரிவித்தார். (9-285)

## தேர்தல் முறைகேடு; மன்னாரில் 21 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மன்னார் மாவட்டத்தில் இதுவரை 21 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலகர் எல்.ஜ.றொகான் குரூஸ் தெரிவித்தார். குறித்த முறைப்பாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-285)



முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட விசுவமடு விஸ்வநாதர் ஆரம்ப பாடசாலையின் புலமைபரிசில் கௌரவிப்பு நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் கடந்த வெள்ளிக்கிழமை விசுவமடு மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் யோ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இந்த ஆண்டு தரம் 5 புலமைபரிசில் பரீட்சைக்கு தோற்றி 193 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் இடம்பெற்ற மாணவன் உள்ளடங்கலாக வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற 39 மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலை 100 வீத சித்தியடைய காரணமான மாணவர்கள் உள்ளடங்கலாக 63 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலையின் ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகள் மற்றும் தேசிய, மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களின் வெற்றிக்காக உழைத்த அதிபர், ஆசிரியர்கள் கௌரவிப்பு என்பன இடம்பெற்றன. புலமைபரிசில் பரீட்சையில் வெட்டு புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஆறுபேருக்கு துவிச்சக்கரவண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# ஜனாதிபதித் தேர்தல்; பல்கலை.மாணவர்களின் முயற்சிகளும் கற்றுக் கொண்ட பாடங்களும்

## தமிழ் மக்கள் கூட்டணி தன்னிலை விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தேர்தல் 2019 தொடர்பில் தமிழர்களின் பலத்தை வெளிப்படுத்த வடக்கு- கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் 06 (ஆறு) கட்சிகளை இணைத்து ஒரு பொது நிலைப்பாட்டை எடுக்க ஒரு பெரும் முயற்சி செய்தனர். இதில் 5 கட்சிகள் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களிடம் 13 கோரிக்கைகளை முன்வைப்பதென ஒருமித்த முடிவை எடுத்திருந்தனர்.


இதன் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சகல விடயங்களிலும் 5 கட்சிகளும் ஒருமித்து இணைந்தே கலந்துரையாடல்களில் கலந்து கொள்வது என்றும் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. இதன் பொருட்டு ஆரம்ப நடவடிக்கைகளாக (1) மேற்படி 13 கோரிக்கைகளை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பு செய்வது (2) அவ்வாறான சந்திப்புகளுக்கான நேர ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்வது ஆகிய பணிகளை எம்.ஏ. சுமந்திரன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தபால்மூல வாக்கெடுப்புக்கு மிகக்குறுகிய காலமே இருந்த காரணத்தால் மேற்படி பணிகள் இரண்டும் விரைவாக செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் துரதிர்ஷ்டவசமாக குறித்த பணிகள் உரிய காலத்தில் நடைபெற எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. காலம் கடத்துவதிலேயே சிலர் கண்ணாக இருந்தார்கள். ஒக்டோபர் 28ஆம் திகதி ஐந்து கட்சிகளும் கூடிய போது மாவை சேனாதிராசா 30ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கக்கோரி 30ஆம் திகதிக்கு ஐந்து கட்சிக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

ஒக்டோபர் 28ஆம் திகதிவரை 13 கோரிக்கைகளை ஆங்கில மொழிக்கு மாற்றக் கூட நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. காலம் செல்லச் செல்ல தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகத்திற்கும் செயலாளர் நாயகத்திற்கும் நாளாந்தம் பல தொலைபேசி அழைப்புக்கள் தேர்தலுக்கு வாக்களிப்பது சம்பந்தமாக வழிகாட்டுதல்கள் கேட்டு மக்களிடமிருந்து வந்த வண்ணம் இருந்தன.

இப்படியான ஒரு இக்கட்டான சூழ்நிலையில் செயலாளர் நாயகம் அன்றிருந்த நிலையையும் தபால்மூல வாக்களிப்பு தொடங்குவதற்கு ஒரு சில தினங்களே இருந்த நிலையையும் கருத்திற்கொண்டு உடனே 13 தமிழ்மூல கோரிக்கைகளை ஆங்கிலத்திற்குத் தாமே மொழி பெயர்த்து மூன்று முக்கிய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு நேரடியாகவே தமது கட்சி சார்ந்த ஒருவரால் கையளித்து குறித்த 13 கோரிக்கைகளையும் பற்றி நேரடியாக வேட்பாளர்களுடன் பேச சந்திப்பை வேண்டியிருந்தார்.

இருவர் 13 கோரிக்கைகளையும் நிராகரித்து பத்திரிகையில் செய்தி அனுப்பினர். மூன்றாமவர் எதுவுமே பேசாதிருந்து விட்டு பின்னர் 13 கோரிக்கைகளையும் நிராகரிப்பதாகப் பத்திரிகை மூலம் அறிவித்தார். இந்த நிலையில்தான் தமிழ் மக்கள் கூட்டணியின் நிலைப்பாடாக தமிழ் மக்கள் இத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்ற ஒரு முடிவை எமது செயலாளர் நாயகம் அறிவித்திருந்தார். இவ்வறிவித்தல் தபால்மூல வாக்களிப்பு நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே அவசர அவசரமாக பத்திரிகைகளுக்கு அறிவிக்கப்பட்டது.



இக்கட்டான சூழ்நிலையில் மேற்கொள்ளப்பட்ட இந்த அறிவிப்பு சில வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியதுடன் மாணவர்கள் முயற்சியிலும் ஒருபின்னடைவை ஏற்படுத்தியதாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது மிகவும் துரதிர்ஷ்ட வசமானது. எமது கட்சி எல்லா சந்தர்ப்பத்திலும் மாணவர்கள் முயற்சி வெற்றி பெறவேண்டுமென்றே கடுமையாக உழைத்து வந்தது.

இதற்கு ஆதாரமாக ரணில் விக்கிரமசிங்க தன்னைத்தனியாகச் சந்திக்கும்படி இரு தடவைகள் அழைப்பு விடுத்த போதும் கூட எமது கட்சியின் செயலாளர் நாயகம் அதனை நிராகரித்ததுடன் 5 கட்சிகளையும் அழைத்து பேசுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தரும்படி அவரிடம் கோரியிருந்தார்.

அத்துடன் பகிரங்கமாக வெளியிட்ட அவரின் அறிக்கையிலும் எக்காரணம் கொண்டும் தனியாக சந்திக்கப் போவதில்லை எனவும் 5 கட்சிகளும் இணைந்தே சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவோம் எனவும் எமது செயலாளர் நாயகம் அறிவித்திருந்தார்.

மேலும் 5 கட்சிகள் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்த பின்னரும்கூட சிலகட்சிகள் யாழ்ப்பாணத்தில் நடந்த சில அரச, அரசியல் கூட்டங்களில் பங்குபற்றியதும் ஐ.தே.க.வேட்பாளரின் தேர்தல் பரப்புரைத் துண்டுப்பிரசுரங்களை ஏந்தியிருந்ததும் தனிப்பட்ட முறையில் சில சந்திப்புக்களை மேற்கொண்டிருந்ததும் அனைவரும் அறிந்ததே.

இந்த பின்னணியில்தான் எம்.ஏ.சுமந்திரன் தானாகவே வலியவந்து பொறுப்பேற்றுக் கொண்ட விடயங்களை செய்யாதிருந்தமை பார்க்கப்பட வேண்டும். எது எப்படியிருப்பினும் தமிழ் மக்கள் கூட்டணியின் அறிக்கையைப் பல்கலைக்கழக மாணவர்களோடு பகிர முடியாமல் போனதற்குக் காரணம் நேரமின்மையே. அவ்வாறான இக்கட்டுக்குள் நாம் தள்ளப்பட்டோம் என்பதை சூழலை ஒட்டி யாவரும் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகின்றோம்.

மேலும் வடக்கு- கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் பக்கச்சார்பற்ற முயற்சி மிக நேர்த்தியாக முன்னெடுக்கப்பட்டதை தமிழ் மக்கள் கூட்டணி பாராட்டுகின்றது. அவர்கள் முயற்சி காலத்தின் தேவை கருதி எதிர்வரும் காலங்களிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு எமது பூரண ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் என வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை செயலாளர் நாயகமாகக் கொண்ட தமிழ் மக்கள் கூட்டணி விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 21ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்தலும்



## அமரர் வேலாயுதம் குணநாயகம்

கடந்த 2019.10.23 புதன்கிழமை சிவபதம் அடைந்த அமரர் வேலாயுதம் குணநாயகம் அவர்களின் 21 ஆம் நாள் நினைவு நிகழ்வு 2019.11.12 இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெற்று அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அவர் நோய் வாய்ப்பட்டு இருந்த வேளை மருத்துவம் செய்த வைத்தியர்களுக்கும் தாதிமார்களுக்கும் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் சிவபதம் அடைந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தோருக்கும் இறுதிக் கிரியையில் பங்குகொண்டு அனைத்துச் செயற்பாட்டிலும் ஒன்றிணைந்து உதவிய உற்றார்,உறவினர், அலயவர்கள், நண்பர்களுக்கும் எம் உளங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(936)

87, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## பௌர்ணமி தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் "வாய் பேசாதிருப்பதன்று மௌனம், மனம் அற்ற நிலையே மௌனம்" எனும் பொருளில் இன்று 12 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை பௌர்ணமி தினம் அனுஷ்டிக்கப்படும்.

இந்நிகழ்வில் ஞானாசிரியை இந்திரா சண்முகசுந்தரம், பேராசிரியர் ஏ.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"தற்கால அரசியல் நிலையில் இளம் சமூகத்தின் பொறுப்புக் கூறலும் எமது வகிபங்கும்" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இன்று 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.228/1, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள வல்லமைத்தளத்தில் இடம்பெறும்.

இதில் அரசியல் ஆய்வாளர்களான சி.கா.செந்தில்வேல், ம.திருவரங்கன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (இ-7-107)

# 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பு

## அமரர் செல்லையா கந்தசாமி



கடந்த 16.10.2019 புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவன் அமரர் செல்லையா கந்தசாமி அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணம் 14.11.2019 வியாழக்கிழமை 10 மணிய ளவில் அன்னாரின் கிழவிதோட்ட இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாய் பெருமனதுடன் ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்வு: 1939.03.10
உதிர்வு: 2019.10.16

(C-8195)

கிழவி தோட்டம்,
கரவெட்டி கிழக்கு.

இங்ஙனம்:
குடும்பத்தினர்.

# வெள்ளைவான் கடத்தல்களுக்கு சாட்சிகளிருந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## அரசும், அரசுக்கு ஆதரவு வழங்கிய த.தே.கூட்டமைப்பும் பொறுப்புக்கூற வேண்டும் என்கிறார் சிவசக்தி ஆனந்தன்

(நெளுக்குளம்)

**வெள்ளைவான் கடத்தல்களுக்கு சாட்சிகளிருந்தும் இதுவரையில் எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்காதிருந்தமைக்கு அரசாங்கமும் அதன் பங்காளியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொறுப்புக்கூற வேண்டு மென ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரு மான சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார்.**



வெள்ளை வான் கடத்தல்கள், படுகொலைகள் தொடர்பாக வெளியாகிய செய்தி தொடர்பில் அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் ராஜித சேனாரட்னவின் ஏற்பாட்டில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது வெள்ளைவான்களில் சாரதியாக பணியாற்றியவர்களில் ஒருவரான அந்தோனி பெர்னாண்டோ மற்றும் கடத்தப்பட்டு விடுதலையான அத்துல மதநாயக்க ஆகியோர் பங்கேற்று வெள்ளைவான் கடத்தல்கள், மற்றும் சித்திரவதை முகாம்கள், சித்திரவதைகள், படுகொலை செய்யப்பட்ட 300 பேரை முதலைகளுக்கு பலியிட்டமை உள்ளிட்ட பல தகவல்களை வெளியிட்டனர்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் இதுபோன்ற பல விடயங்களை தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் கூறியபோதும் அதற்கான சாட்சியங்கள் இருப்பது தொடர்பில் தெரிவித்தபோதும் அந்த விடயங்களை கருத்திலேயே கொண்டிருக்காத ராஜித சேனாரட்ன திடீரென இவ்வாறான சாட்சியங்களை தனது ஊடகவியலாளர் சந்திப்புக்கு அழைத்து வந்தமையின் பின்னணி என்ன?

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்கு இவ்வாறான மிலேச்சத்தனமான விடயங்கள் தொடர்பாக எம்மால் கூறப்பட்டும் தனிப்பட்ட முறை யில் அவருக்கு தெரிந்திருந்தும் இதுநாள் வரை வெளிப்படுத்தாமையும், நடவடிக்கைகள் எடுக்கப்படாமையும் தொடர்பில் அவர் பங்கேற்றிருந்த அரசாங்கமும், அதற்கு முண்டு கொடுத்துக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொறுப்புக் கூறவேண்டியது தார்மீக கடமையாகும்.

ஐ.நா.குழு கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொண்டு திருமலையில் சித்திரவதை முகாம் இருந்தமை குறித்து உறுதிப்படுத்தியிருந்தபோதும் அதுதொடர்பிலும் எவ்விதமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்திருக்கவில்லை. குறைந்தபட்சம் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்தில் இவ்வாறானதொரு பாரதூரமான விடயமொன்று இருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதனைப் பொருட்டாக கொண்டு ஆட்சியாளர்களுக்கு நெருக்கமாக இருந்து வருகின்ற சூழலைப் பயன்படுத்தி தனது கருமங்களை முன்னெடுத்திருக்கவில்லை.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் வெள்ளை வான் கடத்தல்கள், சித்திரவதை முகாம்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று உள்நாட்டிலும் வெளிநாட்டில் சான்றாதாரங்களுடன் வலியுறுத்திய போதும் கடந்த நான்கரை வருடங்களில் எவ்விதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

மாறாக மகிந்த ஆட்சியில் நடைபெற்ற மனித குலத்துக்கு எதிரான மிலேச்சத்தனங்களை பாதுகாக்கின்ற செயற்பாட்டினையே தற்போதைய ஆட்சியாளர்கள் மேற்கொண்டதோடு படைத்தரப்பில் இவ்விடயங்களில் தொடர்புபட்டுள்ளவர்களை குறைந்த பட்சம் விசாரணைக்கு உட்படுத்துவதற்கு பதிலாக அவர்களை உயர்பதவிகளில் அமர்த்தி அழகு பார்த்தனர்.

நீதிக்கு எதிரான அடக்கு முறைகள் மற்றும் சித்திரவதைகளால் எமது இனத்தின் படுகொலைகளையும், அவலங்களையும் தேர்தல்களில் வாக்குச் சேர்ப்பதற்கு பயன்படுத்துவதற்கு பதிலாக அவை தொடர்பில் விரைந்து நடவ்டிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இதுபற்றி நிபந்தனையற்ற ஆதரவளிக்கும் தரப்புக்கள் சிந்திக்க வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-250-299)



## மன்.ஆயருடன் சிவாஜிலிங்கம் சந்திப்பு



(மன்னார்)

ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் ஆயர் இல்லத்தில் சந்தித்து தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை கையளித்து ஆசி பெற்றார்.

அதனை தொடர்ந்து ஆயர் இல்லத்தில் ஓய்வு நிலை ஆயர் பேரருட் கலாநிதி இராயப்பு ஜோசெப் ஆண்டகையை சந்தித்து ஆசி பெற்றார். இதில் முன்னாள் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் கலந்து கொண்டார். (9-285)

## இ.போ.ச.வடபகுதிக்கு 56 புதிய பேருந்துகள்

## கிளி,முல்லை மாவட்டங்களில் சேவைகளை அதிகரிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

இலங்கை போக்குவரத்து சபைக்கு புதிய பேருந்துகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பேருந்துகளை வழங்கி பின்தங்கிய பகுதிகளில் சேவைகளை ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். பயணிகளுக்குச் சிறந்த சேவையை வழங்கும் வகையில் இ.போ.சவுக்கு 2 ஆயிரம் பேருந்துகளை இறக்குமதி செய்வதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்திருந்தது. அந்தவகையில் வடக்கு மாகாணத்தில் உள்ள 7 சாலைகளுக்கும் மொத்தமாக 56 பேருந்துகள் வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மிக முக்கியமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பேருந்து சேவை மிகவும் குறைவாக உள்ளதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பேருந்துகள் பிரதான வீதியூடாக மட்டும் சேவைகளை மேற்கொள்வதால் பின்தங்கிய கிராமப் புறங்களில் சேவைகள் வழங்கப்படுவதில்லை. எனவே மாணவர்கள் பொதுமக்களின் நலன்கருதி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9)

## பாதிக்கப்பட்ட நிலக்கடலை செய்கையாளர்களுக்கு மானிய அடிப்படையில் நிலக்கடலை வழங்கப்படுகிறது

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலக்கடலை செய்கையாளர்களுக்கு மானிய அடிப்படையில் நிலக்கடலை வழங்கப்பட்டு வருவதாக மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் உகநாதன் தெரிவித்துள்ளார்.

தற்போது வடபகுதியில் நிலக்கடலை செய்கையில் முதன்மையான ஒரு மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுவதுடன், கடந்த ஆண்டுகளில் அதிகூடிய நிலக்கடலை உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கடந்த போகத்தில் மேற்கொள்ளப்பட்ட நிலக்கடலை செய்கை அழிவடைந்தன.

இதனால்நிலக்கடலை செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் தமக்கான விதை நிலக்கடலை பெற்றுக்கொள்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்வதாக தெரிவித்திருந்தனர்.

மாவட்டத்தின் நிலக்கடலை உற்பத்தி தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளரிடம் இது தொடர்பாக கேட்டபோது, முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகூடிய நிலக்கடலை செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த வெள்ளத்தின் போது பாதிக்கப்பட்ட நிலக்கடலைச் செய்கையாளர்களுக்கு மானிய விலைகளில் விதை நிலக் கடலை வழங்கப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் நிதியுதவின் சுமார் 15 ஆயிரம் கிலோ நிலக்கடலை விதைகள் விநியோகிக்கப்படவுள்ளன. இதுவரை 10 ஆயிரம் கிலோ நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள 5 ஆயிரம் கிலோ நிலக்கடலை விதைகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

## கட்சியின் முடிவை மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் -செல்வம் எம்.பி

(நெளுக்குளம்)

கட்சியின் தலைமைக்குழு எடுத்த முடிவிற்கு மாறாக தீர்மானம் நிறைவேற்றியவர்கள் மீதும் அதற்கு ஆதரவாக செயற்படும் கட்சி அங்கத்தவர்கள் மீதும் கட்சியானது யாப்பு விதிகளிற்கமைவாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ்.மாவட்ட கிளையினால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சியின் தலைமைக்குழு எடுத்த தீர்மானத்தை நிராகரிப்பதாகவும் சிவாஜிலிங்கத்திற்கு ஆதரவினை தெரிவித்து முடிவெடுத்து இதனை ஊடக அறிக்கையாக வெளியிட்டிருப்பதையும் அறிந்து கவலை கொள்கிறோம். ரெலோ தலைமை குழு எடுத்த தீர்மானம் கட்சியின் உறுதியான இறுதி முடிவாகும்.

இதில் எந்தவித மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை. கட்சியின் இறுதித் தீர்மானத்தை உதாசீனப்படுத்தி, நடைமுறைப்படுத்த தவறும் யாழ். மாவட்ட குழுவின் முடிவு எமக்கு மிகுந்த ஏமாற்றத்தை தருகிறது என மேலும் தெரிவித்தார். (9-250-299)

# பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பெடுத்த அடுத்தடுத்த நாட்களிலேதான் அட்டூழியங்கள் அரங்கேற்றப்பட்டன

## ரணில் மீது அதாவுல்லா காட்டம்



(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பெடுத்த அடுத்தடுத்த நாட்களிலேதான் அட்டூழியங்கள் அரங்கேற்றப்பட்டதை இந்த நாடு இன்னமும் மறந்து விடவில்லை என முன்னாள் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா குற்றம் சாட்டினார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளருமான கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரித்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களில் கூட்டங்கள் இடம்பெற்றன.

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த அத்தனை அட்டூழியங்களையும், அழிவுகளையும் அவர்கள் திட்டமிட்டுத்தான் செய்து முடித்தார்கள்.

ரணில் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியைப் பொறுப்பேற்று மூன்றாம் நாளே முஸ்லிம்களுக்கெதிரான அடாவடித் தனங்களை ஆடி முடித்தார்கள். கண்டி திகனவில் அறிவித்தல் பலகையிட்டு வாகனத்திலே அந்தக் கும்பல்கள் ஏறியமர்ந்து கொண்டு தாங்கள் ஒவ்வொரு அமைப்பு எனக் கூறிக் கொண்டு பட்டப் பகலிலே பாதுகாப்போடு அடித்து. அழித்து முடித்தார்கள். அதனைக் கண்டு கொள்ளாமல் இருந்தார் பாதுகாப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. தன்னுடைய பலவீனங் களை மறைத்து கிழக்கு உட்பட நாட்டின் அத்தனை வளங்களையும் அமெரிக்காவுக்கு தாரை வார்த்துக் கொடுத்து குளிர் காய்பவர்தான் ரணில்.

ரணில் தலைமையிலான அரசு முஸ்லிம் சமுதாயத்தைத் தங்களது நலனுக்காகப் பாவித்திருக்கிறார்கள். சஹ்ரான் என்ற நபர் முஸ்லிமை, இஸ்லாத்தை, இஸ்லாமிய வழிகாட்டியான புனித அல் குர்ஆனை கொஞ்சமேனும் புரிந்து கொண்டவரல்ல.

குர்ஆனும், இஸ்லாமும் சரியாக வழிகாட்டக் கூடியவை. ஆனால் அவர்களால் தயார் படுத்தப்பட்ட சஹ்ரானுக்கு அல் குர் ஆனைப் புரியவில்லை, இஸ்லாத்தைப் புரியவில்லை, மனித நேயம் புரியவில்லை. அப்படிப்பட்ட ஒருவரை வைத்து நம்மை, நம் சமூகத்தை வெளிப்போக வைத்து விட்டார்கள்.

ஆகவே, இப்படிப்பட்டவர்கள் ஆட்சியை அலங்கரிக்க இனியும் இடமளிக்கமுடியாது.

எனவே, இனியும் இந்தச் சதிகாரர்களின் வலையில் வீழ்ந்து விடாது இம்முறை ஒரு தடவையாவது ராஜபக்ஷவின் குடும்பத்திற்கு வாக்களித்துப் பார்ப்போம் என்றும் உங்களையும் வாக்களிக்குமாறும் உங்கள் கால்களில் விழுந்து நான் கேட்கின்றேன்.

இந்த நாட்டின் சிங்கள மக்கள், தமிழ் மக்கள் என அனைவரும் ஏகோபித்த குரலில் புதுயுகம் படைக்க புறப்படும் பொழுது அதில் முஸ்லிம் சமூகமும் தனது பங்களிப்பை முழுமையாகச் செய்து இந்த நாட்டு மக்களின் வெற்றியைக் கொண்டாடத் தயாராக வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோத்தபாய நாட்டிற்காக வேலைசெய்து காட்டியவர்

## பெங்கமுவே நாலக தேரர் சுட்டிக்காட்டு





(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ நாட்டிற்கு வேலை செய்து காட்டிய நபர் என பெங்கமுவே நாலக தேரர் சுட்டிக் காட்டினார்.

காலியில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்த வேட்பாளரும் நாட்டுக்கு உணரும்படியான வேலை செய்து காட்டியவர்களல்ல.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருந்த போதிலும் நாட்டுக்காக எதனையும் செய்யவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர் அமைச்சரவையில் இருக்கும் போது வழங்கப்பட்ட வீடுகள் அனைத்தும்கடனுக்கே வழங்கப்பட்டுள்ளன எனவும் பெங்கமுவே நாலக தேரர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# உலக சைவத் தமிழர்களின் தாயகம் திருவண்ணாமலை

**இருக்கும் இடம் தேடி அன்னதானம் வழங்கும் நிகழ்வு 16.11.2019 கிரிவலம் 12.11.2019**

**சொல்லால் மலிந்த பாடல் வல்லார் மன்னி வாழ்வர்**

பூவார்மலர் கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள் செய்தார்
தூமா மழை நின்று அதிரவெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமா(ம்) பிணை வந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே

அல்லாடு அரவம் இயங்கும் சாரல் அண்ணாமலையாரை
நல்லார் பரவப் படுவான் காழி ஞானசம்பந்தன்
சொல்லால் மலிந்த பாடலான பத்தும் இவை கற்று
வல்லார் எல்லாம் வானோர் வணங்கு மன்னி வாழ்வாரே
(சம்பந்தர் முதலாம் திருமுறை)




**உன்னினர் தங்கட் கெல்லாம் ஒல்லையில் முத்தி நல்கும் அண்ணாமலை அண்ணல்**

**அண்ணாமலையான் அடிக்கமலம் பாடி இறைஞ்சுவோம்**

பஞ்ச பூதத் தலங்களுள் தேயு (நெருப்பு)த் தலமாக விளங்குவதும் நினைக்க முத்தியருளும் தலமாதலால் முத்தி தரும் தலங்களுள் முதன்மை பெற்றதும் மாணிக்கவாசக சுவாமிகளினால் திருவெம்பாவை, திருவம்மானை அருளிச் செய்யப்பட்ட பெருமைக்குரியதும் அருணகிரிநாதர் வாழ்வில் அருட் திருப்பம் ஏற்படுத்தியதும் இரமணமகரிஷி தவமிருந்து அருள் பெற்றதும் கார்த்திகை தீபதரிசனப் பெருவிழா நடைபெறுவதும் ஆகிய பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்ட அற்புதத் தலமாகிய திருவண்ணாமலையானை வணங்குவோமாக.

**அமரர். V. சிவகுமாரன், வீரபதிராயன்,**
**கரணவாய் தெற்கு, கரவெட்டி 16-11-2019 நினைவு தினம்**

செயலாளர், சைவப்பிரகாசப் பேரவை,
யாழ்ப்பாணம்.

(316)

077 378 3316

# பாரதம்

## 'புல் புல்' கோர தாண்டவம் 13 பேர் பரிதாபமாக உயிரிழப்பு





(கொல்கத்தா)


பங்களாதேஷ் மற்றும் இந்தியாவின் மேற்கு வங்காளம் மாநிலத்தை இன்று தாக்கிய புல்புல் புயலை தொடர்ந்து மழை சார்ந்த விபத்துகளில் 12 பேர் உயிரிழந்தனர்.

வங்கக் கடலில் அந்தமான் அருகே உருவான காற்றழுத்த தாழ்வு நிலை புதிய புயலாக வலுப்பெற்றது, இந்தப்புயலுக்கு 'புல்புல்' என பெயரிடப்பட்டது.

இந்நிலையில், காற்றினால் மரம் முறிந்து விழுந்தும் மழையினால் வீட்டுச்சுவர் இடிந்து விழுந்தும் ஏற்பட்ட விபத்துகளில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர். (2)

## சிரியாவில் குண்

## 8 பேர் உயிரிழப்பு :



(டமாஸ்கஸ்)

சிரியாவின், ரக்க மாகாணத்தில் இடம்பெற்ற கார் குண்டுத் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 20 பேர் படுகாயமடைந்தனர்.

துருக்கி பாதுகாப்பு அமைச்சகத்தின் டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரக்க மாகாணத்தின் வடக்கே உள்ள சுலுக் எனும் கிராமத்திலேயே இந்த வெடிப்புச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளதுடன் குறித்த தாக்குதலுக்கு குர்திஷ் அமைப்பினர் காரணம் எனவும் துருக்கிய பாதுகாப்பு அமைச்சகம் சுட்டிக்கட்டியுள்ளது.

சிரியா - துருக்கி எல்லையில் கடந்தவாரம் இடம்பெற்ற கார் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் இச்சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது. (2)

## ஜம்மு- காஷ்மீரில் துப்பாக்கிச் சூடு பயங்கரவாதிகள் இருவர் சுட்டுக்கொலை



(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீரில் பாதுகாப்பு படையினருடன் நடந்த துப்பாக்கி சண்டையில் 2 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டு, 2 யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து, அசம்பாவித சம்பங்களை தவிர்ப்பதற்காக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பயங்கரவாத தாக்குதல்களை தடுக்க இராணுவம் தீவிரமாக கண்காணித்து வருகிறது.

இந்நிலையில் பந்திபோரா பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக தகவல் கிடைத்ததையடுத்து, பாதுகாப்பு படையினர் அங்கு சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்குமிடையே கடும் துப்பாக்கி சண்டை ஏற்பட்டது.

இந்த சண்டையில் 2 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்கள் யார், எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள்? என்பது குறித்து விசாரணை நடத்தப்படுகிறது. (2)

## ஹொங்கொங்கில் தீவிரமா ஆர்ப்பாட்டக்காரரை நோ

(கின்சாஸா)

ஹொங்கொங்கில் பொலிஸ் அதிகாரி ஒருவர், ஆர்ப்பாட்டக்காரர் ஒருவரின் நெஞ்சை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளும் காணொலியொன்று Facebook Live மூலம் நேரடியாக ஒளிபரப்பாகியுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை சாய் வான் ஹோ (Sai Wan Ho) பகுதியில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட கடும் மோதலின்போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் முடக்கி வைத்திருந்த வீதியின் சந்தியில் பொலிஸாருக்கும் முகமூடி அணிந்த சிலருக்கும் மோதல் ஏற்பட்டது. அப்போது முகமூடி அணிந்த நபரை தடுத்து நிறுத்தும் முயற்சியில் பொலிஸ் அதிகாரி ஒருவர் ஈடுபட்டார்.

முகமூடி அணிந்த மற்றொரு நபர் குறித்த பொலிஸ் அதிகாரியை நோக்கி சென்று தாக்குவதற்கு முற்படுகிறார். முகமூடி அணிந்திருந்த நபர் பொலிஸ் அதிகாரியால் நெஞ்சில் சுடப்படுகிறார். இவை Facebook Live காணொலியில் பதிவாகியுள்ளன.

சுடப்பட்ட நபரின் நிலை குறித்து இதுவரை தகவல் வெளியிடப்படவில்லை. ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்ட மாண



வன் Alex

கிழமை

## ரயில்கள் நேருக்கு நேர் மோதல்; ஒருவர் பலி - 30 பேர் படுகாயம்



(ஐதராபாத்)

இந்தியாவின் தெலுங்கானா மாநில தலைநகர் ஐதராபாத்தில் உள்ள கச்சிகுடா ரயில் நிலையத்தில் இரண்டு ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 30 பேர் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஐதராபாத்தில் கச்சிகுடா ரயில் நிலையம் நம்மூர் எக்மோர் ரயில் நிலையத்தை போல் முக்கியமான ரயில் நிலையம் ஆகும். இங்கிருந்து தான் ஆந்திராவின் பல்வேறு பகுதிகளுக்கு, தமிழகம், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

கச்சிகுடா ரயில் நிலையத்தில் இரண்டு ரயில்கள் நேற்றுக் காலை பயங்கரமாக மோதிக் கொண்டு விபத்துக்குள்ளாகின.

மின்சார ரயில் ஒன்று மற்றொரு ரயில் மீது பயங்கரமாக மோதிக்கொண்டது.

இந்த விபத்தில் 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்ததுடன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியது.

படுகாயம் அடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (2)

## அமெரிக்காவில் ஓ.பன்னீர் செ தங்கதமிழ் மகன் விருது வழ

(சிக்காகோ)

அமெரிக்காவில் சிக்காகோ நகரில் நடந்த நிகழ்ச்சியில், தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்துக்கு தங்க தமிழ் மகன் விருது வழங்கப்பட்டது.

அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்றுள்ள தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் கடந்த ஞாயிற்றுக் கிழமை சிக்காகோ சென்றார். அங்குள்ள ஓக் புரூக் டெரேசில் நடைபெற்ற 10 ஆவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு சிறப்பாக முடிந்தமைக்கான பாராட்டு விழாவில் அவர் கலந்து கொண்டார்.


விழாவில், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு தங்க தமிழ் மகன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (2)



# வெளிநாடு

## டுத் தாக்குதல்

## :20 பேர் காயம்



## மாகும் ஆர்ப்பாட்டங்கள்
## நாக்கிச் சுட்ட பொலிஸ்



ன் Alex Chow என்பவர் கடந்த வெள்ளிக் ழமை உயிரிழந்ததை அடுத்து. ஆர்ப்பாட்டங்கள் மீண்டும் தலை தூக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## செல்வத்துக்கு
## வழங்கப்பட்டது



## சுரங்கத்தில் வெடி விபத்து

(பெர்லின்)

ஜேர்மனியில் உள்ள சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

Teutschenthal நகராட்சியில் உள்ள சுரங்கத்திலேயே கடந்த வெள்ளிக்கிழமை இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சுரங்க பணியில் சுமார் 100 பேர் ஈடுபட்டு வந்ததாக தகவல் வெளியாகியது.

வெடி விபத்தின் போது சுரங்கத்திற்கு அடியில் 40 பேர் இருந்தாகவும், அவர்களின் இருப்பிடம் பாதுகாப்பாக இருப்பதாக சுரங்கத்தை இயக்கி வரும் MDR SACHSEN-ANHALT நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெடி விபத்தில் தப்பி 700 அடி ஆழத்தில் பத்திரமாக இருக்கும் சுரங்கத் தொழிலாளர்களை மீட்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். (2)

## மலேசிய முன்னாள் பிரதமரின் நிதி மோசடி வழக்கு தொடரும்

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு



(கோலாலம்பூர்)

மலேசியாவின் முன்னாள் பிரதமர் நஜிப் ரசாக் மீதான 1MDB நிதி மோசடி தொடர்பான வழக்கு விசாரணையைத் தொடரலாம் என மலேசிய உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

SRC International நிறுவனத்துக்குச் சொந்தமான நிதியில், 42 மில்லியன் ரிங்கிட் தொகையை முன்னாள் பிரதமர் நஜிப் முறை கேடாகப் பயன்படுத்தியதாக 7 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட் டுள்ளன.

அந்த வழக்கில், நஜிப்பை விசாரிக்கப் போதுமான முகாந்திரம் இருப்பதை அரச தரப்பு வழக்குரைஞர்கள் ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளதாக நீதிபதி குறிப்பிட்டார்.

நம்பிக்கை மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகள், கள்ளப் பணத்தை, வெள்ளையாக மாற்றிய குற்றச்சாட்டுகள், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு ஆகியவற்றைத் நஜிப் ரசாக் எதிர்நோக்குகின்றார்.

2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்துக்கும் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அந்த மோசடிகளை அவர் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த நிலையில் முன்னாள் பிரதமர் நஜிப் அந்த குற்றச்சாட்டுகளிலும் தம்மைத் தற்காத்துக் கொள்ள வாதிடலாம் என நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. (2)

## எண்ணெய் வளம் கொண்ட ஈரானில் புதிய எண்ணெய்க் கிடங்கு கண்டுபிடிப்பு!

(டெஹ்ரான்)

ஈரான் உலகளாவிய எரிசக்தி வல்லரசு நாடாக கருதப்படுவதுடன், உலகின் எண்ணெய் இருப்புக்களில் 10 சதவீதமான எண்ணெய் வளத்தை ஈரான் கொண்டுள்ளது.

இந் நிலையில் மேலும் 53 பில்லியன் பீப்பாய் கச்சாய் எண்ணெயைக் கொண்ட புதிய கிடங்கொன்றை கண்டுபிடித்துள்ளதாக அந்நாட்டின் ஜனாதிபதி ஹசன் ரூஹானி தெரிவித்தார்.



குறித்த கச்சாய் எண்ணெய்க் கிடங்கானது ஈரானின் எண்ணெய் வளம் கொண்ட குஜெஸ்தான் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்மூலம் ஈரானின் கச்சாய் எண்ணெய் மூன்றில் ஒரு பங்காக உயர்வடைந்துள்ளதுடன் மொத்தமாக தற்போது ஈரானிடம் 150 பில்லியன் கச்சாய் எண்ணெய் பீப்பாய்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## “மரிப்பாய் ஒருநாள் நினைவிருக்கட்டும்”

## மாணவர்களின் மன அழுத்தத்தைப் போக்க நெதர்லாந்து பல்கலையில் விநோத செயற்பாடு



(ஆம்ஸ்டர்டாம்)

தேர்வு நேரங்களில் மாணவர்களுக்கு ஏற்படும் பயத்தையும் மன அழுத்தத்தையும் போக்க அவர்களை சவக்குழியில் படுக்க வைக்கும் வினோதமான முறையை நெதர்லாந்து பல்கலைக்கழகம் கையாள்கிறது.

தேர்வுகள் என்றாலே மாணவர்கள் அனைவருக்கும் ஒரு வித பதற்றம் தொற்றிக் கொள்ளும். அதிலும் பொதுத்தேர்வுகள் என்றால் இன்னும் பரபரப்புடன் காணப்படுவார்கள். அந்நேரத்தில் ஏற்படும் மன அழுத்தத்தினால் தேர்வை கோட்டை விடுபவர்களும் உண்டு. தேர்வுகளில் ஏற்பட்ட தோல்வியினால் மனமுடைந்து தங்களது உயிரை மாய்த்துக் கொண்டவர்களும் உண்டு. தேர்வு நேரத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தத்தைப் போக்க உளவியல் நிபுணர்கள் பல்வேறு வழிமுறைகளை வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், தேர்வு நேரங்களில் மாணவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தத்தைப் போக்க அவர்களை சவக்குழியில் படுக்க வைக்கும் விநோத முறையை நெதர்லாந்து பல்கலைக்கழகம் கையாள்கிறது.

நெதர்லாந்து நாட்டின் நிஜ்மேகன் நகரில் உள்ள ராட்பௌட் பல்கலைக்கழகம் இந்த முறையை கையாள்கிறது. அரைமணி நேரம் முதல் 3 மணி நேரம் வரை சவக்குழியில் மாணவர்கள் படுக்க வைக்கப்படுகிறார்கள். 'வித்தியாசமாக இருங்கள்' என்ற படுக்கையுடன் ஒரு போர்வை, யோகா பாய் ஆகியவை கொடுக்கப்படுகின்றன. மாணவர்களிடையே இது மிகவும் பிரபலமாகியுள்ளது.

இத்திட்டத்தின் நிறுவநர் ஜான் ஹாக்கிங் இதுபற்றி கூறுகையில், '18, 19 வயதுகளில், வாழ்க்கையின் முடிவு, மரணம் போன்றவற்றை பற்றி மாணவர்களிடம் பேசுவது மிக கடினம். ஆனால் இந்த சவக்குழியில் படுப்பது, இந்த பூமியில் நமது வாழ்நாள் பற்றிய உண்மையை ஏற்றுக்கொள்ள உதவியாக இருக்கும்' என்றார்.

கல்லூரி வளாகத்தில் 'மரிப்பாய் ஒரு நாள் நினைவிருக்கட்டும்' என எழுதப்பட்ட பலகைகளும் வைக்கப்பட்டுள்ளன. (2)

# உயர்தரத்தில் சித்தியடையும் அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதி

## கோத்தபாய வாக்குறுதி

(கொழும்பு)

**உயர்தரத்தில் சித்தியடையும் அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழக வரத்தை வழங்கவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்த பாய ராஜபக்ஷ வாக்குறுதி வழங்கினார்.**



கலென்பிதுனுவெவ பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு வாக்குறுதிகளை வழங்கினார்.

கல்விக்காக தான் பாரியளவில் முதலீடு செய்யவுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

உலகில் அதிகளவான நாடுகள் தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் அது தங்களுக்கு சிறந்த உதாரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மீண்டும் முதலமைச்சராக பிள்ளையான் வரவேண்டும்

## கருணா விருப்பம்





(பெரிய போரதீவு)

கிழக்கு மாகாண முதலமைச்சராக பிள்ளையானை, மீண்டும் கொண்டுவரவேண்டுமென தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

பெரியபோரதீவில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரித்து பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "கோத்தபாயவின் ஆட்சிக்காலத்தில்தான் தமிழர்கள் இந்த நாட்டில் நிம்மதியாகவும் பொருளாதாரத்துடனும் பாதுகாப்புடனும் வாழ முடியும்.

இன்று வடக்கு-கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும், வருங்கால ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிப்பதற்காக ஒன்றாக இணைந்திருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இன்று வெளியே நிற்கின்றது. மேலும் 13 கோரிக்கைகளை சம்பந்தன் கொண்டுவந்த போது அதனை மகிந்த ஏற்றுக் கொள்ளவில்லை, சஜித்தும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இவர்கள் உண்மையானவர்கள் என்றால் தேர்தலில் இருந்து ஒதுங்கியிருக்க வேண்டும். ஆனால் இன்று கோத்தபாய ராஜபக்ஷவை தோற்கடிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு சஜித்திடம் சென்றுள்ளனர்.

தமிழர்களை மீண்டும் குழி தோண்டிப் புதைக்கும் நடவடிக்கையையே அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே நாங்கள் மிகவும் கவனமாகச் செயற்படும்போதே கிழக்கு மாகாண தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்க முடியும்.

கோத்தபாய ஜனாதிபதியாக வரும்போதே கிழக்கில் ஆளுநராகவும் முதலமைச்சராகவும் தமிழர் வருவார்கள்.

பிள்ளையான் மீண்டும் முதலமைச்சராக வரவேண்டும். அப்போதே பாரிய அபிவிருத்திகளை காணமுடியும்.

நல்லாட்சி அரசாங்கம் என்று கூறிக்கொண்டு மத்திய வங்கியை கொள்ளையடித்தார்கள். அதனைக்கொண்டே இன்று கூட்டத்திற்கு ஆட்சேர்ப்பதற்காக ஆயிரம் ரூபாவும் உணவுப் பொதியும் கொடுக்கின்றார்கள்.

இது மதுபானத்திற்காகவும் பணத்திற்காகவுமான தேர்தல் அல்ல. கிழக்கு மாகாணத்தில் எங்கள் உரிமையைப் பாதுகாப்பதற்கான தேர்தல்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவின் யாழ்ப்பாணம் தொகுதிக்கான துரித ஊரெழுச்சி அபிவிருத்தி (கம்பெரலிய) திட்டத்தின் கீழ் யாழ்.மாநகர முதல்வரின் சிபாரிசில் கொழும்புத்துறை 4ஆம் குறுக்கு வீதிப் புனரமைப்புப் பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பேச்சும் பழக்கமும்

ஒரு பேச்சுவார்த்தை நடந்து முடிந்தது. அதிலே கலந்துகொண்ட ஒருவர் வெளியே வந்தார். முகம் ஒரு மாதிரியாக இருந்தது.

என்ன சேர்.... எப்படி இருந்தது பேச்சுவார்த்தை?என்று கேட்டேன். அவர் கொஞ்சம் கடுமையாக என்னைப் பார்த்தார்.

அங்கே என்ன சேர்... பேச்சுவார்த்தையா நடந்தது? சொற்பொழிவு தானே நடந்தது என்றார்.

ஏன் சேர் அப்படி சொல்லுறீங்க என்றேன்.

பின்னே என்ன சேர்...எங்களை எங்கே பேச விட்டார்?அவர் மட்டும்தானே பேசிக் கொண்டிருந்தார். ஒருவரே பேசினால் அது எப்படி உரையாடல் ஆகும்? அது சொற்பொழிவு தானே என்றார்.

அவர் சொல்வதும் நியாயம் தான்!

உரையாடல் என்பது ஒரு கலை. உதைபந்து விளையாடுகிறார்களே அதை அதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

அதிலே எப்படி ஒருவரிடம் ஒருவர் பந்தைத் தள்ளிக் கொண்டு போய் கடைசியாக இலக்கை நோக்கி ஓங்கி அடிக்கிறார்கள்?

அதே மாதிரித்தான் உரையாடலிலும் எல்லோரும் பங்கு கொள்கிற மாதிரி சமமான சந்தர்ப்பங்களைக் கொடுக்க வேண்டும். அதை விட்டு ஒருவரே பேச்சு என்கிற பந்தை தன்னுடைய நாக்கு என்னும் மைதானத்திலே வைத்து விளையாடிக் கொண்டிருக்கக்கூடாது. அப்படிச் செய்தால் அது உரையாடல் இல்லை. அது சொற்பொழிவு தானே. எதிராளிக்கு அதனாலே என்ன இன்பம் இருக்கப்போகிறது? எரிச்சல் தான் வரும்! அதனாலே தான் அவர் இப்படிச் சொல்கிறார்!

ஒருவரிடம் ஒருவர் எப்படிப் பேசிக்கொள்வது என்பது கூட நம் ஆளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது சேர்.

மனித உறவுகளை மேம்படுத்துவது எப்படி? இதைப் பற்றிக் கூட நிபுணர்கள் சில குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒருவரிடம் நாம் பேசும் போது அவர்கள் மேலே நமக்கு அக்கறை இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளும் படி பேச வேண்டும்.

என்ன... எப்படி இருக்கிறீர்கள் என்று பிரியமாக ஆரம்பிக்கலாமே! அடுத்தவர்களைத் தாராளமாகப் பாராட்டலாம். அதிலே விடயம் இருக்கிறது.அதுதான் எல்லாவற்றுக்கும் அத்திபாரம்.

யாரிடம் பேசுகின்றோமோ அவருக்கு நாங்கள் நல்ல நண்பர் என்பதைக் காட்ட வேண்டும்.அதற்குத் தகுந்த மாதிரிப் பேச வேண்டும், நடக்க வேண்டும்.

நேரிலே நல்ல விதமாகப்பேசிவிட்டு அந்த ஆள் போனதுக்கு அப்புறம் அவன் கிடக்கிறான் என்று நினைக்கக் கூடாது.

நம் எதிரிலே உட்கார்ந்திருப்பவர் தன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறாரே அது சரிதான் என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். அதற்கு அப்புறம் நாம் நினைக்கிற கருத்தை வலியுறுத்தலாம். இப்பொழுது நம்மை மற்றவர்கள் புகழ வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுவதில்லை. அதே ஆசை மற்றவர்களுக்கும் இருக்குமல்லவா?

அதனாலே புகழ்வதற்குத் தயங்கக் கூடாது, பொய்யாகப் புகழக் கூடாது அவ்வளவு தான்! ஒருவருக்குத் தலையிலே முடியே இல்லை... இது எல்லோருக்கும் தெரிந்த விடயம்... அவர்களிடம் போய் உங்கள் கூந்தல் எவ்வளவு அழகாக இருக்கும் என்று சொன்னால் அதைப் புகழ்ச்சி என்று எடுத்துக்கொள்ளமாட்டார்கள். அதைக் கிண்டல் என்று தான் நினைப்பார்கள்.

நிலத்தை உழுது பக்குவப்படுத்துவதற்கு அப்புறம் தான் நாற்று நடுகின்றோம் . அது மாதிரி அவர்கள் மனதைப் பக்குவப்படுத்துகிற மாதிரிப் பேசி அதற்குப் பின்பு மெதுவாக நினைத்தே கருத்தை எடுத்து வைக்க வேண்டும். குழப்பமான காரியத்தைக் கெடுத்து விடும். அதனாலே நாம் தெளிவாக இருக்க வேண்டியது அவசியம்.

நாம் யாரிடம் பேசப் போகிறோமோ அவருக்கு என்ன பிடிக்கும் என்பதைத் தெரிந்துகொள்வதைவிட அவருக்கு என்ன பிடிக்காது என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்.

நிலைமை சரியில்லை என்றால் பேச்சை ஆரம்பிக்கக் கூடாது. எப்பொழுதும் எங்களைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.அப்படி ஒரு நல்ல அபிப்பிராயம் உருவாகினால் அதைத் தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட நுணுக்கத்தையெல்லாம் புரிந்து கொண்டால்தான் இந்த உலகத்திலே சுமுகமாக இருக்க முடியும். இதுதான் மனித உறவு. மற்றவர்களிடம் சரியாகப் பேசவும் பழகவும் தெரியவில்லை என்றால் என்ன சேர் பிரயோசனம்?

ரொம்ப நாசூக்காகப் பேசத் தெரிந்த ஒருவர் இன்னொரு நண்பர் வீட்டுக்குப் போயிருந்தார். சிறிது நேரம் உரையாடிவிட்டு வரலாமே என்று நினைத்து அவர் என்ன செய்தார் தெரியுமா? அவர்கள் வீட்டில் பதினைந்து நாளைக்கு முன்னர் செய்த மிகுதியாக இருந்த பலகாரத்தை இவர் முன்னால் கொண்டு வந்து வைத்து எங்கள் வீட்டிலே தயார் செய்தது இது. சாப்பிடுங்க சேர். சாப்பிட்டுக் கொண்டே உரையாடுவோம் என்றார். அவரும் சாப்பிட ஆரம்பித்தார் வேறு வழியில்லாமல்!

ஒரு அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு அவர் எழுந்தார். சேர் நான் போயிற்று வாறேன் என்று சொல்லி விட்டு...! ஒன்றும் அபிப்பிராயம் சொல்லாமலே போறீங்களே சேர் என்றார் இவர் . இதுக்கு அவர் இன்றைக்கு நமக்குள்ளே ஏற்பட்ட சந்திப்பு பதினைந்து நாளைக்கு முன்னாடி நடந்திருந்தால் நல்லாயிருக்கும் என்பது என்னோட அபிப்பிராயம் ! என்றார். சொல்லிவிட்டு வயிற்றை அழுத்திப் பிடித்துக் கொண்டு அவசரமாக நடையைக் கட்டினார்!

# தமிழ் மக்கள் தவறாது வாக்களியுங்கள்

## யாழ். வணிகர் கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலே தமிழ் மக்கள் தவறாது வாக்களிக்க வேண்டும். கடந்த 70 வருடங்களாக தமிழ் மக்களின் உரிமைக்கான அகிம்சை, ஆயுதப் போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியாத சூழ்நிலையில் நாம் புத்திசாதுர்யமாக நடக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். அகிம்சைப் போராட்டத்திற்கு இந்த நாட்டில் மதிப்பற்ற நிலையில் நாம் எமது இனத்தை பாதுகாத்து புத்திசாதுர்யமாக அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவேண்டிய நிலையில் இருக்கின்றோம். இந்த நாட்டில் சில பௌத்த பேரினவாத சக்திகளிடமும், சில சிங்கள பேரினவாத சக்திகளிடமும் தமிழ் மக்கள் சிக்கித்தவித்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வேளையில் கடந்த 70 வருடங்களாக எத்தனையோ முறை பேச்சுவார்த்தை நடத்தியும், உடன்படிக்கைகள் செய்தும் எந்த சிங்கள தலைமைத்துவமும் எங்களுக்கான உரிமையை வழங்க முன்வரவில்லை.

எந்தவகையான அணுகுமுறை மூலம் எமது உரிமையை பெற்றெடுக்க முடியுமென வழி தெரியாமல் ஏங்கித்தவிக்கின்றோம். இவ்வேளையிலே ஜனாதிபதி தேர்தல் வருகிறது. இந்த தேர்தலில்தான் தேசிய ரீதியில் தமிழ் மக்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு வாக்குரிமையை கொண்டுள்ளோம். எனவே இதைத் தவறாது பயன்படுத்துங்கள். தமிழ் மக்களாகிய உங்கள் அனைவருக்கும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை புரிந்துகொள்ளக் கூடிய ஒரு ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டிய கடமையுள்ளது; ஜனநாயக ரீதியில் உங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டியது உங்கள் எல்லோரது கடமையுமாகும்.


இதன் மூலமே தற்போதிருக்கும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தக் கூடிய நிலை உள்ளது.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பு தமிழர்கள் பல வழிகளிலும் இலங்கை அரசால் அடக்கியாளப்படுகின்ற நிலை வேகமாகத் தொடர்ந்த வண்ணம் உள்ளது. அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் அதிகரித்துள்ளதுடன், சமய ரீதியாகவும், வேலை வாய்ப்புக்களிலும் பாகுபாடுகள் பார்க்கப்படுகின்றன. தமிழர்களுடைய பூர்வீக நிலங்களின் அபகரிப்பு நடைபெறுகிறது. தமிழ் மக்கள் முன்பு இருந்ததைவிட தற்போது பல வழிகளிலும் புறக்கணிக்கப்படுகின்றனர். இப்படியானதொரு சூழ்நிலையில் வரும் ஜனாதிபதித் தேர்தலில் இதுவரை காலமும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த அடக்குமுறைகளில் இருந்து விடுபட்டு சுதந்திரக் காற்றை சுவாசிக்க தமிழ் மக்கள் புத்தி சாதுர்யமாகவும், மதிநுட்பமாகவும் சிந்தித்து சரியானதொரு ஜனாதிபதி வேட்பாளருக்கு தங்களுடைய வாக்குகளை அளிக்க வேண்டும். எந்த வேட்பாளர் தமிழ் மக்களுக்கு நன்மை செய்யாவிட்டாலும் மறுவாய்ப்பில்லை. தீமை செய்யாமல் இருப்பார் என நினைக்கின்றீர்களோ அவருக்கு வாக்களியுங்கள்.

தமிழ் மக்களாகிய நீங்கள் கடந்த கால வரலாறுகளை சீர்தூக்கி பார்த்தும், ஏற்கனவே தமிழ் மக்கள் தேர்தலைப் பகிஷ்கரித்ததன் மூலம் ஏற்பட்ட விளைவுகளை மனதில் கொண்டும் எவருமே இச்சந்தர்ப்பத்தை தவறவிடாது புத்திசாதுர்யமாக பகுப்பாய்வு செய்து அன்னப்பட்சி பாலையும் நீரையும் பகுத்தறிவதைப் போன்று நீங்களும் பகுப்பாய்வு செய்து சரியான ஒருவரை தெரிவு செய்ய தவறாது எல்லா தமிழ் மக்களும் வாக்களிக்க வேண்டுமென்று யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொள்கின்றது. (இ-7)

# 2009ம் ஆண்டு இந்திய தொடர் நடத்தும் உடன்படிக்கையில் பாரிய நிதி மோசடி

## நாடாளுமன்றில் பகிரங்கப்படுத்தினார் அர்ஜுன



(கொழும்பு)

2009 ஆம் ஆண்டு இந்தியத் தொடர் நடத்தும் உடன் படிக்கையில் பாரிய நிதி மோசடி இடம் பெற்றதாக அமைச்சர் அர்ஜுன ரணதுங்க குற்றம்சாட்டினார்.

குறிப்பாக 15 மில்லியன் டொலர் நிதி வரவேண்டியிருந்த போதும் வெறுமனே 3 மில்லியன் டொலர் மட்டுமே இலங்கை கிரிக்கெட் சபைக்கு கிடைத்தது என்றும் ஏனைய பணத்தொகைக்கு என்னவானது என்பது தொடர்பாக கண்டறிய விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற விளையாட்டுக்கள் தொடர்பான தவறுகளை தடுக்கும் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த காலங்களில் கிரிக்கெட் சபையைத் தன்வசப்படுத்திக் கொண்ட சிலர் இலங்கை கிரிக்கெட் சபைக்கு வரவேண்டிய பணத்தை கொள்ளையடித்துள்ளனர். இதனால் இலங்கை கிரிக்கெட் சபையும் வீரர்களுமே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இந்திய தொடரொன்று இடம்பெற்றது. இதன்போது சில தவறுகள் இடம்பெற்றன. அப்போது கிரிக்கெட் சபையில் இருந்து என்னை நீக்கிவிட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அவ்விடத்தில் நியமிக்கப்பட்டார். அதன் பின்னரே இந்திய சுற்றுப் பயணம் நடத்தப்பட்டது. இந்த தொடரில் அதிகளவிலான தொகை எமக்கு இல்லாமல் போனது.

இந்தத் தொடரில் குறைந்த பட்சம் 14 முதல் 15 மில்லியன் டொலர்கள் இலங்கைக்கு வர வேண்டும். ஆனால் இந்த தொடர் குறித்த உடன்படிக்கையில் எமக்கு 6.6 மில்லியன் டொலர்கள் என்ற உடன்படிக்கை செய்யப்பட்டது.

ஆனால் கிடைத்தது 3 மில்லியன் டொலர்கள் மட்டுமேயாகும். ஏனைய தொகை என்னவானது. இதனை யார் கையாண்டது? என்ற இந்த ஊழல்கள் அனைத்தையும் தேடிப்பார்க்க வேண்டும். கிரிக்கெட் சபைக்கு மிகப் பெரிய நட்டம் ஏற்பட்டது. இது தனிப்பட்ட ஒரு சிலரின் தேவைக்காக செய்யப்பட்ட ஊழலாகும்.

இதுவரை காலமாக விளையாட்டுத்துறை அமைச்சர்கள் செயற்பட்டும் குற்றவாளிகள் பலர் குறித்து தெரிந்தும் எவரும் சட்டம் ஒன்று கொண்டுவந்து குற்றவாளிகளை தண்டிக்க முன் வரவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இருப்பைப் பற்றி பேசுவோரே விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்தவர்கள்

## வியாழேந்திரனை நோக்கி சிறிநேசன்



(ஏறாவூர்)

கிழக்கின் இருப்பைப் பற்றி தற்போது பேசுவோரே விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்தவர்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் குற்றம் சாட்டினார்.

அத்துடன், எமக்குத் தேவை ஜனநாயகமயப்படுத்தப்பட்ட நாடாளுமன்ற அனுபவமுள்ள தலைவரே தவிர இராணுவ ஆட்சியாளர் அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்ற தெளிவுபடுத்தலை மேற்கொள்ள வேண்டிய தார்மீகப் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது.

கடந்த கால இருண்ட வேதனைகளைப் படிப்பினையாக வைத்து இந்தமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆழமாகச் சிந்தித்து அன்னம் சின்னத்தில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் பேசும் மக்கள் வாக்களிக்க வேண்டுமென்ற முடிவை எடுத்துள்ளது.

முன்பு அநீதிகளைச் செய்து பத்திரிகையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொண்டர் நிறுவன ஊழியர்கள் ஆகியோரை படுகொலை செய்தமையை மனதில் வைத்துக் கொண்டு முடிவெடுக்க வேண்டும்.

அரசியல் யாப்பு முயற்சியை குழப்பியடித்தவர்கள், இன்று நாங்கள் அரசியல் தீர்வைத் தருகின்றோம் என ஏமாற்றி குற்றம் சுமத்துபவர்கள், அதனை தடுத்து நிறுத்தியவர்கள் என்பதோடு முன்பு இவர்களின் ஆட்சியில் தான் பல குற்றங்கள் முன்னெடுக்கப்பட்டன. இப்போது அவர்களுடன் தான் வியாழேந்திரன் இணைந்துள்ளார்.

தற்போது கிழக்கின் இருப்பைப் பற்றிப் பேசுவோர் தான் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள். சஜித்துக்குப் பின்னால் உள்ள முஸ்லிம் தலைவர்களை விட மொட்டு பக்கம் உள்ளவர்கள் தான் ஆபத்தானவர்கள். இதனை கருத்தில் கொண்டு தமிழ் பேசும் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேர்தலில் கோத்தபாய வென்றால் ஹிட்லர் ஆட்சியை ஏற்படுத்துவார்

## மயந்த அச்சம்

(பேராதனை)

கோத்தபாய ராஜபக்ஷ இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றால், நாட்டில் நடக்கும் இறுதியான ஜனநாயக சுதந்திர தேர்தல் இந்தத் தேர்தலாக இருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

பேராதனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கோத்தபாய ராஜபக்ஷ இந்தத் நாட்டில் ஜனநாயகமான மக்கள் உரிமை, சுதந்திரத்தை அடக்கி நாட்டில் ஹிட்லர் ஆட்சியை ஏற்படுத்துவார்.

தவறியேனும் இந்த தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றி பெற்றால், முதலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மீதே தாக்குதல் நடத்துவார்கள். பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆரம்பித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை கோத்தபாய உள்ளிட்ட அணியினர் அழித்து விடுவார்கள்.

மக்கள் எங்களிடம் அடுத்த பிரதமர் யார் என்று கேட்கின்றனர். சிரேஷ்ட மற்றும் இளையவர்களை இணைத்து அரசாங்கத்தை அமைக்கப் போவதாக



சஜித் தெளிவான பதிலை வழங்கினார்.

நாடாளுமன்றத்தைக் கூட்டி பெரும்பாலான உறுப்பினர்களின் விருப்பத்தை வென்றவரை பிரதமராக நியமிக்கப் போவதாக சஜித் குறிப்பிட்டுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காணாமல் ஆக்கப்படுகின்ற விடயத்துக்கு தோற்றுவாயாக, முன்னோடியாகச் செயற்பட்டு படுகொலைகளை நடத்தியவர் பிரேமதாஸ



## பஷீர் பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்படுகின்ற விடயம் இலங்கைக்கு புதிய விடயம் அல்ல. அதற்குத் தோற்றுவாயாக, வழிகாட்டியாக இருந்தவர் ஆர். பிரேமதாஸ. பிரேமதாஸவை பற்றி நாடகம் எழுதிய பெரும் ஊடகவியலாளரும் பெருங்கலைஞருமான றிச்சர்ட் டி சொய்ஷா காணாமல்ஆக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார் என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தவிசாளரும் உற்பத்தித் திறன்கள் ஊக்குவிப்பு முன்னாள் அமைச்சருமான பாஷீர் சேகுதாவூத் தெரிவித்தார். ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் விசேட ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒலுவிலில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலே பேரினவாதம், பெருமதவாதம் ஆகியன தொடர்பான அச்சம் வளர்ந்து வருகின்றது. இந்த அச்சத்தை பயன்படுத்தித்தான் முஸ்லிம்களிடம் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி வாக்குகளைப் பெறுவதற்கு பெருமுயற்சி எடுக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கின்ற முஸ்லிம் தலைவர்களும் முஸ்லிம்களை அச்சபடுத்துவதன் மூலமே வாக்குகளை எடுக்கலாம் என்று நம்புகின்றனர்.

சாதித்திருப்பதாகவோ, ஒப்பந்தம் செய்திருப்பதாகவோ அல்லது முஸ்லிம்களின் பிரச்சினையைத் தீர்த்துத் தருவதாகவோ சொல்லி இவர்களால் முஸ்லிம் மக்களிடம் வாக்குக் கேட்க முடியாது. முஸ்லிம் மக்கள் அவற்றை எல்லாம் நம்ப மாட்டார்கள் என்று இவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் அவர்களின் கால் நூற்றாண்டு கால வரலாறு முஸ்லிம் மக்களுக்கு மிக நன்றாகவே தெரியும். ஆகவே முஸ்லிம் மக்களை ஏமாற்றுவதற்கு புதிய புதிய கருத்துகளைக் கண்டு பிடிக்கின்றார்கள். ஏற்கனவே பயந்திருக்கின்ற முஸ்லிம் சமூகத்தை மேலும் அச்சப்பட செய்கின்றனர். ஆனால் பேரினவாதம், பெருமதவாதம் ஆகியவற்றைக் கண்டு முஸ்லிம்கள் அஞ்சுவது போல முஸ்லிம்களின் தீவிரவாதம் தொடர்பாக பெரும்பான்மை இனம் மற்றும் மதம் ஆகியவற்றை சேர்ந்த மக்கள் அச்சப்படுகின்ற சூழ்நிலையில் தான் நாங்கள் வாழ்கின்றோம்.

எங்களை அடிக்கின்றார்கள். எங்களை அடிக்கின்றார்கள் என்று நாங்கள் எப்பொழுதும் பிரசாரத்தை உலகத்துக்கு செய்து கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் எங்களை அறியாமலே எங்களுக்குள் தீவிரவாதம் இஸ்லாமிய இயக்கம் என்கிற அடிப்படையில் வளர்ந்திருக்கின்றது. இவற்றை எல்லாம் அவதானித்தவர்களாகவே மிக சிறுபான்மை இனத்தை சேர்ந்த முஸ்லிம்கள் இத்தேர்தலில் நடந்து கொள்ள வேண்டி இருக்கின்றது.

இலங்கையின் வரலாறு நெடுகிலும் நீண்டகாலமாக பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்துதான் வருகின்றது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்ன செய்தார்? இராஜினாமா கடிதங்களை ஏற்கனவே வாங்கி வைத்திருந்தார். அவர் என்ன இராணுவ உயரதிகாரியாக இருந்தவரா? பிரேமதாஸவின் காலத்திலே மிகப் பெரும் ஊடகவியலாளரும் பெருங்கலைஞருமான றிச்சர்ட் டி சொய்ஷா காணாமல் ஆக்கப்பட்டார். மெயா கவுத? மொக்கத கரனே? என்று றிச்சர்ட் டி சொய்ஷா பிரேமதாஸவை பற்றி எழுதிய நாடகம் காரணமாகவே அவர் படுகொலை செய்யப்பட்டார்.

இன்று சஜித் பிரேமதாஸ அவருடைய தந்தையின் ஆட்சியை அச்சொட்டாக அப்படியே கொண்டு வரப் போவதாக சொல்கின்றார். றிச்சர்ட் டி செர்ய்ஷா போன்ற காணாமல் ஆக்கப்படுகின்ற சூழ்நிலை வர மாட்டாது என்று ஏன் கேள்வி எழுப்ப முடியாது? இலங்கை அரசுக்கு உட்பட்ட சட்டம், ஒழுங்கு ஆகியவற்றுக்கு சமாந்தரமான புறம்பான தனிப்பட்ட சட்டம், ஒழுங்கு பிரேமதாஸவால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அவர் ஒரு புலனாய்வுப் பிரிவை வைத்திருந்தார். அதற்குப் பிரதி பொலிஸ்மா அதிபர் யோசப் பொறுப்பாக இருந்தார். அவர் முக்கிய நபர்கள் தொலைபேசி அழைப்புக்களை ஒட்டுக் கேட்கின்ற வேலையை செய்து கொடுத்தார். முக்கியமான அரசியல்வாதிகளின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டு, பிரேமதாஸவுக்கு ஆபத்தானவர்களாக இருக்கக் கூடியவர்கள் இல்லாமல் ஆக்கப்பட்டார்கள்.

காணாமல் ஆக்கப்படுகிற விடயம் புதிய விடயம் அல்ல. இலங்கை அரசியலில் நீண்ட நெடிய காலமாக இருந்து வருகின்ற விடயம். அதற்குத் தோற்றுவாயாக, வழிகாட்டியாக இருந்தவர் பிரேமதாஸ. அந்தப் பிரேமதாஸவின் மகன் அந்த பிரேமதாஸவின் ஆட்சியை அப்படியே கொண்டு வரப் போவதாக சொல்கின்றபோது இதெல்லாம் நிகழ மாட்டாது என்று எப்படி நம்புவது? கொள கொட்டியா அல்லது பச்சைப் புலி என்கிற தனி ஆயுத அமைப்பை பிரேமதாஸ வைத்திருந்தார்.

கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திரக் ஹோட்டல் ஒன்றில் 203, 204 ஆம் இலக்க அறைகளில் அந்த சட்டவிரோத ஆயுதக் குழு இயங்கியது. அந்த கொள கொட்டியா அமைப்புத்தான் ஜே. ஆரை அச்சப்படுத்தியது. அந்த சட்டவிரோத அமைப்புத்தான் பிரேமதாஸவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் வழங்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது.

சஜித் பிரேமதாஸ இப்படி ஒன்றை செய்ய மாட்டார் என்று நாம் எப்படி நம்புவது? அதைக் கண்டு அச்சப்படத் தேவை இல்லையா? எங்கே முஸ்லிம் தலைவர்கள்? வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்து படிப்பினைகளைப்பெற வேண்டும். அப்போது தான் நாம் உண்மையான வழி காட்டிகளாக முஸ்லிம் சமூகத்துக்கு இருக்க முடியும். எனவே எமது பேரன், பேர்த்திகளை பலி கொடுக்கிற அரசியலுக்கு ஐக்கிய சமாதான கூட்டமைப்பு நிச்சயமாக தயாராக இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# ரவிராஜின் 13 ஆவது ஆண்டு நினைவு நாள்











(சாவகச்சேரி)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜின் 13 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் போரின் முடிவும் போராட்டத் தொடர்ச்சியும் எனும் தொனிப் பொருளில் நினைவுப் பேருரையை உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட் தந்தை எஸ்.ஜே.இமானுவேல் அடிகளார் ஆற்றியிருந்தார். அதனைத் தொடர்ந்து சிறப்புரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் ஆற்றியிருந்தார். நிகழ்வில் மூவருக்கு அமரர் நடராஜா ரவிராஜ் ஞாபகார்த்த விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், சாந்தி சிறிஸ்கந்தராசா, மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள், சாவகச்சேரி நகர, பிரதேச சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், ரவிராஜின் உறவினர்கள், தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியினர், மகளிர் முன்னணியினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு அமரர் ரவிராஜின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தினர். (இ-30-312)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 120 | 90 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 240 | 180 | 150 | 300 |
| தக்காளி | 100 | 110 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 80 | 80 |
| கோவா | 140 | 140 | 80 | 160 |
| கரட் | 200 | 180 | 200 | 300 |
| பூசணி | 50 | 60 | 80 | 100 |
| புடோல் | 120 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 160 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 200 | 320 |
| பெரிய வெங்காயம் | 160 | 110 | 170 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 120 | 120 | 120 | 160 |
| லீக்ஸ் | 250 | 280 | 140 | 160 |
| பீற்றூட் | 150 | 100 | 70 | 160 |
| கறிமிளகாய் | 300 | 280 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 320 |
| போஞ்சி | 160 | 160 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | 70 | 120 |
| கீரை-1பிடி | 40 | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 150 | 280 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 350 | 300 | 150 | 300 |
| வெங்காயப்பூ | — | 200 | — | — |
| முள்ளங்கி | 50 | 80 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 50 | 50 | 150 | 120 |

# தோட்டத் தொழிலாளர்களாக இருந்த மக்கள் தமிழ் விவசாயிகள் என அழைக்கப்படவுள்ளனர்

## மனோ மட்டற்ற மகிழ்ச்சி



(தலவாக்கலை)

இந்த நாட்டில் தோட்டத் தொழிலாளர்களாக இருந்த மக்கள் இனிமேல் தமிழ் விவசாயிகள் என்று அழைக்கப்படவுள்ளார்கள். ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தொழிலாளர்களுக்கு தமிழ் விவசாயிகள் என்று பெயர் சூட்டியுள்ளார் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார். தலவாக்கலை நகர சபை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் திகாம்பரம் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மனோ மேலும் தெரிவிக்கையில்,

சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கும் வரை ஓயாமல் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றோம். அதற்காக நாடு முழுவதும் சென்று மக்களுக்குத் தெளிவுபடுத்தி வருகின்றோம். ஜனாதிபதித் தேர்தலில் 16 ஆம் திகதி வாக்களித்த பின்னர் 18 ஆம் திகதி சஜித் ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார்.

இந்தத் தேர்தலில் சஜித்துக்கு கிடைக்கும் வெற்றி தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு கிடைக்கும் வெற்றியாகும். சஜித்திற்கு தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக பெருந்தோட்ட மக்கள் நலன் சார்ந்த பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒன்று அவர்களை "தமிழ் விவசாயிகள்" என்று பெயர் சூட்டப்பட்டுள்ள விடயமாகும். இதுவரை காலமும் சொந்த வீடு, சொந்தக் காணி இல்லாத மக்கள் இனிமேல் தமிழ் விவசாயிகள் என்று அழைக்கப்படவுள்ளார்கள். அதே போல், மலையகத்தில் திகா என்ற பெயரையும் யாராலும் அசைக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## குளவிக்கூடு அழிப்பு



(கரணவாய்)

மந்திகை சந்தையிலுள்ள அரசமரத்தில் காணப்பட்ட இராட்சத குளவிக்கூடு யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் படையினரால் எரித்து அழிக்கப்பட்டது. குறித்த அரசமரத்தில் இராட்சத குளவிக்கூடு இருப்பது தொடர்பில் வலம்புரியில் செய்தி வெளியாகி இருந்தது. இந்நிலையில் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலிருந்து வந்த உத்தியோகத்தர்கள் அதை தேன்கூடு எனத் தெரிவித்து அலட்சியம் செய்த நிலையில் யாழ். அரச அதிபரின் நடவடிக்கையால் மேற்படி குளவிக்கூடு தீயணைப்புப் படையினரால் அழிக்கப்பட்டது. (இ-60)



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் காரியாலயம் வடமராட்சியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. வடமராட்சி வியாபாரி மூலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் அலுவலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. (படங்கள்:-மகாலிங்கம்)

# வெலிக்கடை சிறையில் கைதிகள் போராட்டம்

(கொழும்பு)

மரண தண்டனைக் கைதிகள் இருவர் வெலிக்கடைச் சிறைச்சாலைக் கூரையின் மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதியொருவரை பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருந்த நிலையில் தம்மையும் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு ஒரு வாரம் மாத்திரமே எஞ்சியுள்ள நிலையில், கொலைக் குற்றம் புரிந்த குற்றவாளியொருவரை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்துள்ளது பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)






# ஜனாதிபதியின் பொது மன்னிப்பால் சிறையிலிருந்து வெளியேறிய ஜூட்

(கொழும்பு)

ராஜகிரிய ரோயல் பார்க் சொகுசு குடியிருப்புத் தொகுதியின் படிக்கட்டுக்களில் வைத்து, 2005 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி தனது காதலியின் சகோதரியான 19 வயதுடைய இவோன் ஜொன்சன் எனும் யுவதியை கழுத்தை நெரித்தும் தலையை தரையில் அடித்து மண்டை ஓட்டினை 64 இடங்களில் சேதப்படுத்தியும் கொடூரமாகக் கொலை செய்த ஜூட் ஸ்ரீமந்த என்டனி ஜயமஹ விடுதலை செய்யப்பட்டார்.

குறித்த கொடூரக் கொலை தொடர்பில் குற்றவாளி ஜூட் ஸ்ரீமந்த என்டனி ஜயமஹவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த நிலையில் இரு வேறு ஜனாதிபதி மன்னிப்புக்களை அடுத்து அவர் நேற்று முன்தினம் மாலை இவ்வாறு விடுதலை செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் ஜூட் ஸ்ரீமந்த என்டனி ஜெயமஹ குருவிட்ட சிறைச்சாலையில் இருந்து விடுதலையாகி வெளியேறியதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிர்வாகம்) பந்துல ஜயசிங்க உறுதி செய்தார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஸ்ரீமந்த என்டனி ஜயமஹவுக்கு 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி மன்னிப்பின் கீழ், அந்தத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது.

தற்போது அவருக்கு ஜனாதிபதியின் பூரண மன்னிப்பு கிடைத்துள்ளது. அதனால் அவர் விடுவிக்கப்பட்டார் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தென்னகோன் தெரிவித்தார். (இ-7)

# காணாமல் போனோரின் உறவினர்களின் 1000 ஆவது நாள் போராட்டத்தில் என்னால் கலந்து கொள்ள முடியாது

## வேட்பாளர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வவுனியாவில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டத்தின் 1000ஆவது நாள் போராட்டத்தில் என்னால் கலந்துகொள்ள முடியாது என ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டத்தின் 996 ஆவது நாள் போராட்டத்தின் போது அவர்களைச் சந்தித்திருந்தேன்.

இதன்போது அவர்களிடம் தெரிவித்தேன் உங்களால் நாளை மறுதினம் 14ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள 1000 ஆவது நாள் போராட்டத்தில் என்னால் கலந்துகொள்ள முடியாதென்று. தேர்தலில் பங்குகொள்வதனால் 13 ஆம் திகதி நள்ளிரவின் பின் நாம் எந்த நிகழ்வில் பங்கெடுத்தாலும் அது தேர்தல் பிரசாரமாகவே கருதப்படும். ஆகவே என்னால் கலந்துகொள்ள முடியாது என அவர்களிடம் தெரிவித்திருந்தேன். நவம்பர் 16 ஆம் திகதியின் பின் அவர்களைச் சந்திப்பேன்.

நாம் 15 தடவைகளுக்கு மேல் ஜெனிவாவில் போராடியுள்ளோம். நடுவீதியில் ஜனாதிபதி மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக போராடியுள்ளோம். காணாமல் போனோரின் உறவினர்களுக்கு வெகுவிரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முழு முயற்சியையும் செய்வேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# அழிவுக்காக வாக்களிக்காமல் ஆக்கத்துக்காக வாக்களியுங்கள்

## வேலுகுமார் அறிவுரை

(கண்டி)

நாட்டில் திரும்பும் திசையெல்லாம் சஜித்துக்கான வெற்றிக்கோஷமே ஓங்கி ஒலித்துக் கொண்டிருப்பதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் வேலுகுமார் எம்.பி. தெரிவித்தார்.

மேலும் அழிவுக்காக வாக்களிக்காமல் ஆக்கத்துக்காக வாக்களியுங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாடு முழுவதும் சஜித் ஆதரவு அலை உருவாகியுள்ளதால், கோத்தாவின் முகத்தில் சோகம் குடிகொண்டுள்ளதை தற்போதே காணக்கூடியதாக இருக்கின்றது. ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் அவரிடமிருந்த அந்த வேகம் தற்போது இல்லை.




சிங்கள மக்களும் இன்று தெளிவாக உள்ளனர். இதன் காரணமாகவே எங்கு சென்றாலும் சஜித், சஜித் என்ற நாமம் உச்சரிக்கப்படுவதை கேட்கக் கூடியதாக இருக்கின்றது.

மொட்டு மலரும் என வழி மீது விழிவைத்து காத்திருப்பவர்களுக்கு தேர்தல் முடிவுகள் பெரும் சோகமாகவே அமையும் என்பதால் முன்கூட்டியே அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எனவே, அழிவுக்காக வாக்களிக்காமல் 'ஆக்கத்துக்காக வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1886

### பரதன்

நிறைய துன்பங்களைச் சுமந்தாலும் புன்னகைக்க மறந்து விடாதீர்கள். ஒரு நாளிலே வாடி விழும் பூக்கள்கூட அழுவதில்லை




### குவேனி

வாழ்க்கையின் பயணத்தில் ஓட்டம் மட்டுமே அவசியமானதன்று... அவ்வப்போது ஓய்வும் அவசியம்



### மாருதன்

மறக்க முடியாத குற்றங்களை மன்னித்து விடுங்கள்... மன்னிக்க முடிந்த குற்றங்களை மறந்து விடுங்கள்



### கவிதா

ஒரு உண்மையான உறவு உன்னைத் தேடி வரும் வரை நீ தனியாக இருப்பதில் தவறு இல்லை...




### ராஜி

விட்டுக் கொடுப்பதும் இறங்கிப் போவதும் தப்பில்லை... ஆனால் அதை உணர்ந்தவர்களிடம் மட்டும் காட்டுங்கள்... உணராதவர்களிடம் காட்டினால் காயப்படுவது நாம் மட்டுமே!!!



### கண்மணி


தன்னம்பிக்கை என்ற ஒன்றை உன்னிடம் இருந்து சீர்குலைக்கும் உயிர்கொல்லி நோய்தான் அச்சம். அதைப் போக்கும் மருந்தே தைரியம்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# காய் இல்லாத மரம்



அரசர் கிருஷ்ணதேவராயரின் அவைக்கு ஒரு நபர் வந்தார்.

அவர் அரசரிடம்,

"அரசே! என்னுடைய வயலும் பக்கத்து வீட்டுக்காரர் வயலும் அருகருகில் உள்ளன. இரண்டுக்கும் இடையில் உள்ள வரப்பில், ஒரு தென்னை மரம் உள்ளது. பக்கத்து வீட்டுக்காரர் அதை எனக்கு விற்றுவிட்டார். நான் தான் அதை நன்றாகப் பராமரித்து வருகிறேன்.

இன்று அவர் என்னைத் தேங்காய் பறிக்கக்கூடாது என்றார். இப்போது அவர் தன் முடிவை மாற்றிக்கொண்டு விட்டாராம்.

மரம் திரும்ப அவருக்கு வேண்டுமாம்" என்று முறையிட்டார். அதைக்கேட்டு அவையினர் அனைவரும் திடுக்கிட்டனர்.

அமைச்சர் சொன்னார், "அந்த மனிதாபிமானம் அற்ற மனிதரைக் கைது செய்து வந்து சிறையில் அடைக்க வேண்டும்" என்றார்.

அதற்குள் சேனாதிபதி, அந்த நபரைக் கைது செய்து வரத் தயாராகிவிட்டார்.

அப்போது அரசர் "என்ன செய்யலாம்?" என்று கேட்பதைப் போல் தெனாலிராமனைப் பார்த்தார்.

தெனாலிராமன் புரிந்து கொண்டு, "தாங்கள் அனுமதி தந்தால், இதற்கான தீர்வை நாளைக்குத் தள்ளி வைத்துக் கொள்ளலாம்..." என்றார்.

அரசர், "சரி" எனவே, தெனாலி அந்த நபரிடம், "நாளைக்கு உன் பக்கத்து வீட்டுக்காரனையும் அழைத்துவா..." என்று அவனை அனுப்பி விட்டார்.

மறுநாள் அந்தநபரும், பக்கத்து வீட்டுக்காரனும் சபைக்கு வந்தனர்.

இருவரிடமும் நன்கு விசாரித்த பிறகு தெனாலிராமன் சொன்னார்,

"அப்படியானால் நீ உன் மரத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ள விரும்புகிறாய் இல்லையா?" என்றார். அதற்கு அவன், "ஆம் ஐயா!" என்றான்.

"சரி, நீ அவனுடைய பணத்தைத் திரும்பக் கொடுத்து விடு..." என்றார் தெனாலிராமன். அவனும் பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டான். சபையினருக்கு ஒன்றும் புரியவில்லை.

"தெனாலி ஏன் இப்படியெல்லாம் செய்கிறார்?" என்று திகைத்தனர்.

பிறகு தெனாலி, மரத்தை வாங்கியவரிடம், "சரி... இன்றிலிருந்து அந்த மரம் உன்னுடையது இல்லை..." என்றார். அந்த மனிதரிடம் ஏமாற்றம். அப்போது தெனாலிராமன் தொடர்ந்து, "இன்னொரு விடயம்...

அந்த மரம் நீ வாங்கும் போது எப்படி இருந்ததோ அப்படியே அதை நீ திரும்பக் கொடுத்துவிட வேண்டும்..." என்று கூறி விளக்கினார்.

"அதாவது நீ மரத்தை அவரிடம் வாங்கும் போது அம்மரம் காய்க்கத் தொடங்கவில்லை. ஆகவே, அதைத் திரும்ப ஒப்படைப்பதற்கு முன்பு எல்லாக் காய்களையும் பறித்துக் கொண்டு விடு..." என்றார் வாங்கியவரிடம்.

திரும்பப் பெற்றவரிடம், "காய் இல்லாத மரத்தைத் தானே நீ விற்றாய்...? ஆகவே, என்றைக்கும் காயில்லாத மரம் தான் உன்னுடையது.

அதில் இனிமேல் காய்க்கும் காய்கள் எல்லாம் மரத்தைத் திரும்பக் கொடுத்தவரையே சேரும்... அதை அவர் பறித்துக் கொள்ள அவ்வப்போது நீ அனுமதிக்க வேண்டும் தடுக்கக்கூடாது. நீயும் பறித்துக் கொள்ளக் கூடாது..." என்றார்.

தெனாலியின் இத்தீர்ப்பை அரசர் ஆமோதித்தார்.

திரும்பப்பெற்றவன், முகத்தில் ஏமாற்றம்.

புகார் கொடுத்த நபர் மகிழ்ச்சியுடன் எல்லாரையும் குறிப்பாக, தெனாலிராமனை வணங்கிவிட்டு . விடை பெற்றுச் சென்றார்.

**நீதி:கேடும் பெருக்கமும் இல் அல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றோர்க்கு அணி.**

**இலாப, நட்டத்திற்கு நியாயத்தில்இடம் கொடாது, நெஞ்சத்தில் நேர்மை வளையாது இருத்தலே சான்றோருக்கு அணி.**

## பிரதேசங்களின் வழக்குச் சொற்கள் சில

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| காத்து | காற்று | காய் பிஞ்சு | மரக்கறி | ஆணம் | சொதி | துரவு | சிறுதேணி |
| தேள்வை | தேவை | வெரசா | விரைவாக | பொறகு | பின்பு | மறுகா | பின்பு, பிறகு |
| கிழிஞ்ச | கிழிந்த | ஸ்ரோர் | தொழிற்சாலை | அன்ன | அன்னம் | மனே | மகனே |
| கறடி | கரடி | மடுவம் | கொழுந்து நிறுக்கு மிடம் | பொன்ன | பொன்னை | பத்தை | பற்றை |
| இண்டைக்கு | இன்றைக்கு | காடி | மாடு | நம்மளுவொழுக்கு | எங்களுக்கு | களவெட்டி | சூட்டுக்களம் |
| இதிலை | இதிலே | மோன | மகன் | தரவை | ஆழம் குறைந்த நீர்ப்பகுதி, வெளி | | |
| புத்தகம் | பொத்தகம் | பசுந்து | அழகு | | | | |

**ஆக்கம்: ஈ.மதுசாயினி**
**தரம் - 10**

## குண்டுக் குண்டுக் கத்தரிக்காய்



குண்டுக் குண்டுக் கத்தரிக்காய்
உருண்டையான சுண்டக்காய்

நீளமான முருங்கைக்காய்
நீண்டு தொங்கும் புடலங்காய்

பட்டை போட்ட வெண்டைக்காய்
பச்சைநிற பாகற்காய்

கூட்டமாக வாருங்கள்
கொண்டு சென்று உண்ணலாம்
கொண்டு சென்று உண்ணலாம்



ஜெ.லக்ஷிகன்
தரம் 3F, யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

# கோத்தாவை வைத்து இலங்கையை ஆட்டிப் படைக்கவே குடியுரிமை விவகாரத்தில் அமெரிக்கா அமைதி காக்கிறது



## சுஜீவ சுட்டிக்காட்டு; சகாக்கள் மீது சாடல்

(கொழும்பு)
அமெரிக்கக் குடியுரிமையை நீக்காமல் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியானால் நிச்சயம் அந்த நாட்டின் சொல்லுக்கு கட்டுப்பட்டு பயந்து செயற்பட வேண்டிய நிலைமை உருவாகும்என அமைச்சர் சுஜீவ சேனசிங்க சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அமெரிக்கக் குடியுரிமையை நீக்கியவர்கள் தொடர்பில் கடந்த செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வெளியிட்டிருக்கும் பெயர்ப்பட்டியலில் கோத்தபாயவின் பெயர் உள்ளடக்கப்படவில்லை.

எனினும் கோத்தபாயவின் சகாக்கள் அவரது அமெரிக்கக் குடியுரிமை நீக்கப்பட்டு விட்டதாக போலியான பிரசாரங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் சர்வதேச ரீதியில் பலம் மிக்க நாடாகக் காணப்படும் அமெரிக்கா இந்த விடயத்தில் அமைதியை பேணுகிறது. நாட்டில் இவ்வாறு பாரிய குழப்பம் ஏற்பட்டிருப்பதையும் அவதானித்துக் கொண்டிருந்தும் கோத்தபாயவின் குடியுரிமை நீக்கப்பட்டுவிட்டதா? இல்லையா? என்பதை அறிவிக்காமல் இருக்கிறது.


இவ்வாறு அமெரிக்கா அமைதியாக இருப்பதற்கான காரணம், கோத்தபாய தேர்தலில் வெற்றி பெற்றால் அமெரிக்க பிரஜையான அவரை தனது ஆதிக்கத்தின் கீழ் செயற்பட வைக்கவேயாகும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## இதோ ஆதாரம்

# கோத்தாவின் இரத்து செய்யப்பட்ட கடவுச்சீட்டை வெளியிட்ட நாமல்




(கொழும்பு)
அமெரிக்கப் பதிவாளர் திணைக்களம் வெளியிட்ட மூன்றாவது காலாண்டுக்குரிய, குடியுரிமையைத் துறந்தவர்களின் பட்டியலில், கோத்தபாய ராஜபக்ஷவின் பெயர் இடம்பெறாதது, ராஜபக்ஷவினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ உள்ளிட்ட ஐ.தே.கவினர் சமூக ஊடகங்களில் இந்தப் பட்டியலை வெளியிட்டு, தீவிரமான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஹரின் பெர்னாண்டோவுக்கு டுவிட்டரில் பதிலளித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, "பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அமெரிக்க குடியுரிமை தொடர்பான சந்தேகங்களுக்கு போதிய விளக்கம் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது.

இதோ ஆதாரம், இனி அவர் அமெரிக்க குடிமகன் அல்ல" என்று குறிப்பிட்டு, கோத்தபாய ராஜபக்ஷவின் குடியுரிமை துறப்பு ஆவணத்தின் பிரதியை இணைத்துள்ளார்.

பின்னர், அவர் தனது டுவிட்டரில் இரத்துச் செய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷவின் அமெரிக்க கடவுச்சீட்டின் படத்தையும் வெளியிட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் கடவுச்சீட்டின் முதல் பக்கத்தில் இரத்து என ஆங்கிலத்தில் சிவப்பு மையினால் முத்திரை குத்தப்பட்டுள்ளதுடன், இரண்டு இடங்களில் துளையிடப்பட்டுள்ளது, அத்துடன் படம் மற்றும் விபரங்கள் அடங்கிய பக்கத்திலும், இரண்டு துளைகள் இடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)








தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மாணவர் விடுதித் திறப்பு விழா நேற்று முன்தினம் அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
(படங்கள்: ஈச்சமோட்டை செய்தியாளர்)

# 2012-ம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலைக்குள் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் நினைவேந்தல்



(கொழும்பு)
கடந்த 2012ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் நடந்த படுகொலையில் உயிரிழந்தவர்கள் நினைவுகூரப்பட்டனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்பாக குறித்த நினைவுகூரல் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் எதிர்ப்புறமாக, உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

கொல்லப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என உயிரிழந்தவர்களின் உறவினர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

கடந்த 2012ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட குழப்பத்தையடுத்து, சிறைச்சாலைக்குள் நுழைந்த இராணுவத்தினரால் 27 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் 40 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

ஆயிரம் இரவுகளின் வணக்கத்தைவிட ஒரு மணி நேரம் அறிவுரை புகட்டுவது மேலானது.
– நபிகள் பிரான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஈழத் தமிழர்களைப் போல பாவப்பட்டவர்கள் யாருமில்லை

ஈழத் தமிழினம் படும் பாட்டை என்ன வென்று சொல்வது.

இலங்கையை ஆண்ட தமிழினம் இன்று அநாதையாக, யாருமற்ற ஏதிலிகளாக வாழ் கிறது.

இலங்கை வேந்தன் இராவணன் தமிழன் என்று சொல்வதற்குக்கூட எங்கள் தமிழ் அரசி யல்வாதிகளிடம் நெஞ்சுரம் இல்லை.

சிவபக்தனாகிய இராவணேஸ்வரனே திருக் கோணேச்சரத்து கோயிலையும் கன்னியா வெந்நீரூற்று கிணறுகளையும் கட்டுவித்தான் என்பது வரலாறு.

ஆனாலும் அந்த வரலாறுகளைக் கூறினால் அது இந்த நாட்டின் ஆதிச் சமயம் சைவம் என்பது உறுதியாகிவிடும் என்பதால்,

அந்த உண்மையை வெளிப்படுத்துவதற்கு தமிழ் அரசியல் தரப்பில் இருக்கும் சைவ சம யம் சாராத அரசியல்வாதிகள் தடைவிதிக் கின்றனர்.

இந்நிலைமை காரணமாக திருகோண மலை கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியைப் பறிமுதல் செய்ய சிங்கள பௌத்தம் கங்கணம் கட்டி நிற்கிறது.

இதுதான் என்றால் இல்லை. பாடல் பெற்ற மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தை இடித் தழிக்க வேண்டுமென சிலர் திட்டம் தீட்டி வரு கின்றனர்.

அவர்களின் திட்டத்தைத் தடுக்க முடியாத வர்களாக சைவ சமயத்தவர்கள் இருக்கின்ற னர்.

என்ன செய்வது சிங்கள பௌத்த பேரின வாதத்துடனும் இராணுவத் தரப்புடனும் நல்ல தொரு தொடர்பைக் கொண்டுள்ளவர்கள் மன் னார் திருக்கேதீச்சர ஆலயத்தை இல்லா தொழிக்க முற்படும்போது,

சமானிய சைவ மக்கள் என்னதான் செய்ய முடியும்.

இவை ஒருபுறமாக இருக்க, மறுபுறத்தில் ஒட்டுமொத்த ஈழத் தமிழினம் என்று பார்க் கும்போது; காலத்துக்குக் காலம் ஏற்படும் இனக் கலவரங்கள் தமிழர்களையும் அவர் களின் சொத்துக்களையும் துவம்சம் செய்ய,

தமிழினத்துக்கு எதிராக நடத்தப்பட்ட முப்பது ஆண்டு காலப் போர் தமிழ் இனத்தை அழித்து அந்த இனத்தை நிர்மூலமாக்கியது.

இவை சிங்களப் பேரினவாதத்தால் நடந் தேற, அந்த இழப்பில் தமிழினம் துவண்டு போயிற்று.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் அரசியல் தலைமையோ எஞ்சிய தமிழினத்தை விற்றுப் பிழைப்பு நடத்துகிறது.

இதன்காரணமாக தமிழின அழிப்பு, காணா மல்போனவர்களுக்கு நடந்த கதி, கடத்தப்பட்ட வர்கள் எங்கே? என்ற கேள்வி என இவை எவற்றுக்கும் விடை தெரியாமல் – விசாரணை நடக்காமல் காலம் கடக்கிறது.

இவ்வாறு எல்லா வழிகளிலும் பாவப்பட்ட ஓர் இனமாக ஈழத் தமிழினம் இருக்கிறது என்பதைத்தான் வேதனையோடு கூறமுடியும்.

## பசு மாட்டினை வெட்டிய நால்வர் பொலிஸாரால் கைது

புளியம்பொக்கணையில் சம்பவம்

(தருமபுரம்)

சட்டவிரோதமாக பசு மாட்டினை வெட்டிக் கொன் றமை தொடர்பில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் தரும புரம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட புளியம்பொக்கணை பகுதியில் அனுமதியற்ற முறையில் சட்டத்திற்கு விரோ தமாக பசு ஒன்றினை இறை ச்சித் தேவைக்கு வெட்டிய குற்றச்சாட்டில் 4 பேர் தரும புரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இன்று செவ் வாய்க்கிழமை நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத் தப்படவுள்ளனர் என தரும புரம் பொலிஸார் தெரிவித் துள்ளனர். (ம-3,316)

சிறுநீரக நோய்த் தடுப்புக்கான

## அவுஸ்ரேலியாவின் உடன்படிக்கை இரண்டு வருடங்களினால் நீடிப்பு

சிறுநீரக நோய்த் தடுப்பு ஜனாதிபதி செயலணிக்கும் அவுஸ்திரேலிய அனு விஞ் ஞான தொழிநுட்ப நிறுவ னத்திற்கும் (ANSTO) இடையே இலங்கையில் பரவி வரும் நோய்க் கார ணம் கண்டறியப்படாத சிறு நீரக நோய் பற்றி ஆய்வு செய்வது தொடர்பான ஒத் துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மேலும் இர ண்டு வருடங்களினால் நீடிக் கப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்டுள்ள புரி ந்துணர்வு உடன்படிக்கை யுடன் சம்பந்தப்பட்ட ஆவ ணங்களை அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் டேவிட் ஹொலி (David Holy) நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித் தார்.

இந்த புரிந்துணர்வு உட ன்படிக்கையின் முன்னேற் றங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையா டப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2017 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா விற்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜய த்தின்போது ஜனாதிபதிக்கும் அவுஸ்திரேலியாவின் அப் போதைய பிரதமர் மெல்கம் டர்ன்பூல் அவர்களுக்கு மிடையே இடம்பெற்ற கலந் துரையாடலின் போது இணக் கம் காணப் பட்டதன்படி சிறுநீரக நோய்த் தடுப்பு க்காக அவுஸ்திரேலிய அர சாங்கத்தின் தொழிநுட்ப உதவியை பெற்றுக்கொள் ளும் புரிந்துணர்வு உடன் படிக்கையில் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இவ்வுடன்படிக்கை 2019 ஆண்டு மே மாதம் 25ஆம் திகதியுடன் நிறைவடை கின்றது.

ராஜரட்ட உட்பட பல பகுதி களில் மக்களுக்கு பாதிப்பாக உள்ள சிறுநீரக நோய்த் தடுப்புக்காக ஜனாதிபதியின் வழிகாட்டலில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் தற் போது நாட்டில் நடை முறைப்படுத்தப்படுவதுடன், இந்த நோய் தொடர்பாக ஆய்வு செய்து அது பரவு வதை தடுப்பதற்காக தொழி நுட்ப உதவியை வழங்கும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் தற்போது அவுஸ்திரேலிய அனு விஞ்ஞான தொழி நுட்ப நிறுவனம் இலங்கை யில் முன்னெடுத்துள்ளது.

சிறுநீரக நோய்த் தடுப்பு ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளர் அசேல இத்த வெல உள்ளிட்டோர் இந் நிகழ்வில் கலந்துகொண் டனர். (ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நோயாளியைப் பார்க்க ஒரு மைல் தூரம் செல். இரண்டு பேர்களுக்கு இடையில் சமாதானம் செய்ய இரண்டு மைல் தூரம் செல். ஒரு நண் பனைக் காண மூன்று மைல்தூரம் செல்.

-அரேபிய பழமொழி

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பாமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதே சத்தில் மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவா ணர் வீதி, பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழு ங்கை, மருதனார்மடம் - யாழ்.நுண்கலைபீடம், அல் லைப்பிட்டி, மண்கும்பான், வெண்புறவிநகர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம் மன் கோவிலடி, கம்பர் மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், வல்வெட்டித் துறை ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கனகபுரம், அம்பாள்குளம், உருத்திர புரம், ஜெயந்திநகர், சிவந கர், கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும், வவு னியா பிரதேசத்தில் செட் டிகுளம் நகர பிரதேசத்தின் ஒரு பகுதியிலும் மன்னார் பிரதேசத்தில் பெரியபண்டி விரிச்சான், சின்னப் பண்டி விரிச்சான், மடு பிரதேசம் ஒரு பகுதி, மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களி லும், மின்சாரம் தடைப்ப டும்.

மன்னாரிலிருந்து யாழிற்குக் கடத்தப்பட்ட

## 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்பு

(முறிகண்டி)

8 லட்சம் ரூபாய் பெறு மதியான மரக்குற்றிகள் பூநகரி பொலிஸாரால் மீட் கப்பட்டுள்ளது.

மன்னார் பகுதியிலி ருந்து யாழ்ப்பாணத்திற்கு டிப்பர் வாகனத்தில் பெறுமதி வாய்ந்த முதிரை மரக் குற்றிகள் கடத்தப்படுவதாக பூநகரி பொலிஸ் நிலைய புலனாய்வினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பூநகரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச் எம் ஏ என்றனவீரவின் தலைமை யிலான பொலிஸாரால் சோத னையிடப்பட்டபோது குறித்த மரக் குற்றிகள் மீட்கப்பட் டுள்ளன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் 10ம் திகதி பிற் பகல் இடம்பெற்றுள்ளது.

டிப்பர் வாகனத்தில் 23 மரக் குற்றிகளை ஏற்றிய வாறு யாழ்ப்பாணம் - மன் னார் வீதி ஊடாக அனு மதிப்பத்திரம் இல்லாது எடு த்து செல்லப்பட்ட சந்தர்ப் பத்திலேயே இவை மீட்கப் பட்டுள்ளன.

சம்பவத்தில் வாகனத்தை செலுத்திய மன்னார் பேசா லையை சேர்ந்த நபர் ஒரு வர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டுவரும் பூநகரி பொலி ஸார் இன்று செவ்வாய்க் கிழமை கிளிநொச்சி மாவ ட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின் றனர். (ம-3,100)

ஜனாதிபதி மைத்திரி தலைமையில்

## விமானப்படை வீரர்களுக்கு பதக்கம் சூட்டும் விழா

மூன்று தசாப்த காலமாக இருந்து வந்த கொடூர பயங் கரவாதத்தை மனிதாபிமான நடவடிக்கையின் மூலம் நிறைவு செய்து தாய் நாட் டிற்கு அமைதியையும் நல்லி ணக்கத்தையும் கொண்டு வருவதற்கு உயிரைப் பணயம் வைத்து உன்னத சேவையை செய்த இலங்கை விமானப்படை அதிகாரிகள் மற்றும் ஏனைய பதவி நிலையில் உள்ளவர்களு க்கு வீரோதார விபூஷன, வீர விக்ரம விபூஷன, ரண விக்ரம மற்றும் ரண சூர பதக்கம் சூட்டும் விழா முப் படைகளின் தளபதியான ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் தலைமை யில் நேற்று பிற்பகல் ஜனா திபதி அலுவலகத்தில் இடம் பெற்றது.

வீரோதார விபூஷன பத க்கம் 05 பேருக்கும் வீர விக்ரம விபூஷன பதக்கம் 03 பேருக்கும் ரண விக்ரம பதக்கம் 15 பேருக்கும் மற் றும் ரண சூர பதக்கம் 51 பேருக்குமாக மொத்தம் 74 பேருக்கு இதனபோது பதக் கங்கள் சூட்டப்பட்டன.

ஜனாதிபதியின் செய லாளர் உதய ஆர்.செனெ விரத்ன, பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் சாந்த கோட்டே கொட, பாதுகாப்பு பணிக் குழாம் பிரதானி எட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுமங்கல டயஸ் உள்ளிட்ட இலங்கை விமா னப்படையின் சிரேஷ்ட அதி காரிகள் இந்நிகழ்வில் கல ந்துகொண்டனர். (ம-3)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"சுவர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிரு க்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்"

-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மனம் என்ற கடிவாளம்



புலன்களே குதிரைகள்; மனம்- கடிவாளம்; புத்தி- சாரதி; உடல்- தேர்; இவற்றின் தலைவ னான, மன்னனான ஆன்மா தேரில் வீற்றிருக் கிறான்.

குதிரை வலிமைமிக்கதாக, கடிவாளத் திற்கு அடங்காதவையாக இருந்து, சாரதி யான புத்திக்கு அவற்றை அடக்க முடியாம லும் போகுமானால் தேர் ஆபத்திற்கு உள்ளா கும். மாறாகப் புலன்களாகிய குதிரைகளை, மனமாகிய கடிவாளத்தால் புத்தி என்ற சாரதி திறம்பட அடக்கி நடத்தினால் தேர் இலக்கை அடைகிறது.

எனவே இந்தத் தவம் என்பது என்ன? உடலையும் புலன்களையும் வழிநடத்தும் போது மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்து அவையிரண்டும் தாம் விரும்பும்படி செல்லவிடாமல் தடுத்து வைப்பது தவம் ஆகிறது.

# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது வலைப்பாடு ஜெகமீட்பர் அணி



கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக்கழகம் மாகாண ரீதியில் நடத்தும் கற்பக சமர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பதிவு செய்யாததால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 05:03 என்ற கோல் கணக்கில் ஜெகமீட்பர் அணி வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (க)

# பிரிவு II அணிகளுக்கிடையிலான ஆட்டம் வெற்றி பெற்றது சென்.நீக்கிலஸ் அணி



பிரிவு 02 உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பள்ளிமுனை சென்.லூசியா அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி மோதியது.

ஆட்டநேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் சென்.நீக்கிலஸ் அணி வெற்றி பெற்றது.

நீக்கிலஸ் அணி சார்பாக பெனோஜன் வெற்றிக் கோலைப் பெற்றுக் கொடுத்தார். (க)


**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**


# காலிறுதிக்கு தகுதி பெற்றது கொற்றாவத்தை சிவானந்தா



வலிகாமம் லீக்கின் அனுசரணையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள லீக்குகளில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் என்.நவரட்ணராஜா ஞாபகார்த்த "தலைவர் கிண்ண" உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பதிவு செய்தமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் சிவானந்தா அணி அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சென்.அன்ரனிஸ் அணியை வென்று இறுதிக்குத் தெரிவானது பாடும்மீன் அணி



கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக்கழகம் மாகாண ரீதியில் நடத்தும் கற்பக சமர் வெற்றி கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் அணி மோதியது.

ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பதிவு செய்யாததால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 03:01 என்ற கோல் கணக்கில பாடும்மீன் அணி வெற்றி பெற்று இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (க)

# ஐந்தாவது செற்வரை சென்றது ஆட்டம் ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்



அமரர் கு.மதனசுந்தரம் ஞாபகார்த்தமாக வல்வை சனசமூக சேவா தமது பவள விழாவை முன்னிட்டு நடத்திய யாழ். மாவட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் வல்வை விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி அணி மோதியது. முதலாவது செற்றில் ஆவரங்கால் மத்தி அணி பலத்த போராட்டத்தில் 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால் இரண்டாவது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி பலத்த சவாலின் மத்தியில் 28:26 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது.

மூன்றாவது செற்றில் ஆவரங்கால் மத்தி அணி தாமும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடி மீண்டும் 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 52:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அதற்கும் பதிலடி கொடுத்தது.

இதனால் வெற்றி,தோல்வியை தீர்மானிக்கும் ஐந்தாவது செற்றில் இரு அணிகளும் பலப்பரீட்சை நடத்தின. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 15:12 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. (க)

## யாழ்.பல்கலைக்...

இதில் வவுனியா வடக்கு கனகராயன் குளம் குறிசுட்டகுளம் பகுதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் தர்மிலன் (வயது-20) என்ற மாணவனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

வவுனியா கனகராயன்குளம் குறிசுட்டகுளம் பகுதியைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஒருவர் நேற்று முன்தினம் தடி வெட்டுவதற்காக வவுனியா காட்டுப் பகுதிக்குச் சென்றிருந்தார். நீண்ட நேரமாகியும் குறித்த மாணவன் வீடு திரும்பவில்லை.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து கனகராயன்குளம் பொலிஸார். அப்பகுதி இளைஞர்கள், விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து தேடுதலை மேற்கொண்டனர்.

பின்னர் நேற்றுக் காலை மீண்டும் தேடுதலை மேற்கொண்டபோது மண் அகழகப்பட்ட குழியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

காட்டுக்குள் கிரவல் வெட்டப்பட்ட கிடங்குக்குள் தண்ணீர் தேங்கிய பகுதிக்குள் வீழ்ந்து இளைஞன் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் நீதவானின் வருகையின் பின்னர் மருத்துவ சோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் கனகராயன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,299)

## சுதந்திரக் கட்சி...

வரவுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரி வித்து தெல்லிப்பளை,சாவகச்சேரி, கரவெட்டி ஆகிய இடங்களில் நடைபெறும் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளார். (ம-3,10)

## வெட்டுக்காயங்...

ளார். 31 வயதான இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் குறித்த பகுதியை சேர்ந்த அன்ரன் ஜெராட் மேரி அகிலா என்ற 9 மாத குழந்தையின் தாயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது. குறித்த பகுதியில் கணவன், மனைவி மற்றும் ஒரு குழந்தை அடங்கலாக வாழ்ந்து வந்துள்ளனர்.

திருமணமாகி ஒரு வருடம் ஆகியுள்ள நிலையில் இவர்களிற்கு 9 மாத குழந்தை ஒன்றும் உள்ளது. இந்த நிலையில் கணவர் நேற்று வெளி மாவட்டம் ஒன்றுக்கு சென்றுள்ளார்.

அவர் வெளி மாவட்டத்திற்கு சென்ற நிலையில் குறித்த குடும்பப் பெண்ணிற்கு துணையாக முதியவர் ஒருவர் அங்கு பாதுகாப்பிற்காக தங்கியுள்ளார்.

அவர் அதிகாலை 5.30 மணியளவில் வெளியே சென்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. காலை கணவர் வீட்டுக்கு வந்து பார்த்த போது மனைவி சடலமாக இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த அக்கராயன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்த பெண்ணின் கழுத்து மற்றும் முகத்தில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும், கூரிய ஆயுதம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே அவர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் காலை 6.30 மணிக்கு பின்னர் இடம்பெற்றிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,100,312,350)

## கோத்தாவைக்...

பினர் அங்கஜன் இராமநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் ஒழுங்கமைக்கப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் வெள்ளைவான் சம்பவத்துடன் கோத்தபாயவைத் தொடர்புபடுத்தி நேற்றைய தினம் வெளிவந்த செய்தி தொடர்பில் தெளிவுபடுத்தியதுடன் தேர்தல் காலங்களில் இவ்வாறு வெளியிடப்படும் கருத்துக்கள் மூலம் தமிழ் மக்களை திசைதிருப்ப ஒரு பகுதியினர் செயற்படுவதாகக் குற்றம் சாட்டினார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கும் ராஜித சேனாரத்ன, கோத்தபாய ராஜபக்ஷ மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரபூர்வமாக இருந்தால் ஏன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் கேள்வி எழுப்பினார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி அமைத்து நாலரை வருடங்கள் கடந்த நிலையில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் தற்போதைய ஜனாதிபதி வேட்பாளருமான கோத்தபாய ராஜபக்ஷவைக் குற்றவாளியாக்க முடியவில்லை.

இவ்வாறான நிலையில் கோத்தபாயவின் வெற்றியை சகித்துக் கொள்ள முடியாதவர்கள் இறுதி நேரத்தில் ஆதாரமற்ற சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

ராஜிதவால் அழைத்து வரப்பட்ட வெள்ளை வான் சாரதி எனப்படுபவரினால் ஊடகங்கள் முன் சரியான முறையில் பேசமுடியாது தடுமாறிய சம்பவம் ஒளிநாடாக்கள் மூலம் அறிய முடிகிறது.

கோத்தபாய காலத்தில் கடத்திச் செல்லப்பட்டவர்களை கொன்றுவிட்டு சீதாவாக்கைக் காட்டுப்பகுதியில் உள்ள குளம் ஒன்றில் உள்ள முதலைகளுக்கு இரையாகப் போடுவார்கள் என குறித்த சாரதி தெரிவித்தபோது இடைமறித்த ஊடகவியலாளர் அவ்வாறாயின் குறித்த குளத்தைக் காட்ட முடியுமா? எனக் கேட்டதற்கு, தான் இப்போது குறித்த குளத்தை மறந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

சட்டரீதியாக கோத்தபாய ராஜபக்ஷவை வெல்ல முடியாதவர்கள் அரசியல் ரீதியில் சேறு பூச நினைப்பதை தமிழ் மக்கள் சார்பில் தான் வன்மையாகக் கண்டிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மேலும் தெரிவித்தார். (ம-10)

## வடக்கு ஆளுநர்...

பயணிகள் விமானத்தில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் சென்னைக்கு புறப்பட்டுச் சென்றார். (ம-3,10)

## மகளின் இழப்பை..

(வயது- 61) என்பவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பகல் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் மகளின் இழப்பை தாங்கிக் கொள்ளாத அவரின் தந்தை யான வல்லி இரத்தி னம் (வயது-88) என்பவர் மாலை உயிரிழந்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இருவரதும் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மந்திகை கருகம்பன் இந்து மயானத்தில் தந்தையினதும் மகளினதும் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன.(ம-3,60)

## 1,113...

பொதிகளாக பொதி செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த பீடி சுற்றும் இலைகள் மீட்கப்பட்டுள்ளன. (ம-3)

## 3 வய...

அறைக்குச் சென்றுள்ளார். சிறிது நேரத்துக்கு பின்னர் வீட்டுக்குள் இருந்து, கண்டங்கருவளை இனத்தைச் சேர்ந்த பாம்பு வெளியேறியுள்ளது. அந்தப் பாம்பை, சிறுவனின் தந்தை அடித்துக் கொன்று விட்டார். அதன் பின்னர் எழுந்து வந்த சிறுவன், மீண்டும் உறங்குவதற்காகச் சென்று விட்டதாகவும் தெரியவருகின்றது.

இந்நிலையில், நேற்றுக் காலை சிறுவனை எழுப்பியபோது நினைவற்று இருந்ததாகவும் இதன்பின்னர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சிறுவனை எடுத்துச் சென்றபோது அவர் பாம்பு தீண்டியதில், ஏற்கெனவே உயிரிழந்து விட்டார் என்றும் வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 42 கடிதங்கள்...

தூங்க தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஜனாதிபதியாக இருந்த கால கட்டத்தில் போரை விரும்பியதில்லை. அத்தோடு அனைத்து இனங்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டேன்.

இவ்வாறான நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக அதன் தலைவர் பிரபாகரனிடம் ஏறக்குறைய நாற்பத்திரண்டு கடிதங்களுக்கு மேல் அனுப்பினேன்.

அக்கடிதத்தில் யுத்தத்தை நீங்கள் ஆரம்பித்தால் அதற்கு எதிராக நயம் செயற்படுவோம் எனக் குறிப்பிட்டேன்.

ஆகவே கடிதங்களை எதிர்வரும் காலத்தில் பகிரங்கப்படுத்த தான் தயாராகவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்தார். (ம-3,10,101)

## அடக்குமுறை...

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த சந்திரிகா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு கோரி மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ராஜபக்ஷ குடும்ப ஆட்சியில் மக்கள் எந்தளவு பாதிப்புகளை எதிர்நோக்கினீர்கள் என்பதை அறிவீர்கள். இந்த அடக்குமுறை குடும்பத்தினர் மீண்டும் அதிகாரத்துக்கு வர துடித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் குடும்ப ஆட்சிக்கு இனியும் மக்கள் இடம் கொடுக்கக் கூடாது.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது. நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அவர்களுக்கு மீண்டும் அதிகாரம் செல்லுமாயின் நாட்டில் மீண்டும் கடத்தல்கள், படுகொலைகள் இடம்பெறும்.

அதுமட்டுமல்லாது ராஜபக்ஷவின் குடும்பத்துக்கு எதிராக செயற்பட்டவர்கள் கடத்தப்படலாம். படுகொலை செய்யப்படலாம். சில வேளைகளில் திட்டமிட்ட வகையில் சிறைகளில் அடைக்கப்பட்டு பழிவாங்கப்படுவார்கள். இந்த திருட்டுக் கும்பலின் கையில் நாடு மீண்டும் செல்லக் கூடாது.

தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பாக களமிறங்கியுள்ள சஜித் பிரேமதாஸவினை தமிழ் மக்களுக்கும் நன்கு தெரியும். மகிந்த குடும்பத்தின் ஆட்சியுடன் ஒப்பிடுகையில் இவரது ஆட்சியில் ஜனநாயகம் இருக்கும்.

இதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தில் தீர்த்து வைப்பதாக கூறியுள்ளார். எனவே தமிழ் மக்கள் நன்கு சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றார். (ம-3,101)

## வெள்ளைவான்...

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தின் பூரண அவதானம் திரும்பியதாகவும், அதன்படி ஊடகங்களில் வெளியிடப்பட்ட விபரங்கள், ஒலி மற்றும் ஒளிபரப்புக்களின் பிரதிகளுடன் அது தொடர்பில் பூரண விசாரணைகளை முன்னெடுக்க குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதானி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர கூறினார்.

பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ம-3)

## மக்களை எவரும்..

யால் அவர்களை ஒருபோதும் ஏமாற்ற முடியாதென பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய தெரிவித்துள்ளார். (ம-3)


















# நீதிமன்றில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டவருக்கு பொது மன்னிப்பு வழங்கமாட்டேன்



## ஜனாதிபதி வேட்பாளர் சஜித்

(கொழும்பு)

நீதிமன்றத்தில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்படும் எந்தவொரு குற்றவாளிக்கும் தனது ஆட்சிக்காலத்தில் பொது மன்னிப்பை வழங்க போவதில்லை என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். கல்கமுவை நகரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தி, சட்டம், ஒழுங்கை பாதுகாத்து அதன் ஊடாக பயங்கரவாதிகளையும் போதைப் பொருள் வியாபாரிகளையும் நாங்கள் அழிப்போம். கப்பம் பெறும் அரசியல் மற்றும் கொலையாளிகளை நாங்கள் அழிப்போம். பாலியல் குற்றங்களை செய்வோரை அழிப்போம். இப்படியான கடுமையான குற்றங்களை செய்த, சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்கு நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய மாட்டேன் என்பதை உறுதியாக கூறுகிறேன் எனவும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வெள்ளைவான் சாரதி தொடர்பில்

# அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு

(கொழும்பு)

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக கருத்துக்கள் கூறிய வெள்ளைவான் சாரதி எனக் கூறப்படும் நபரின் தகவலை மறைத்தார் என சட்டத்தரணி ஜனஜித் சில்வா வினால் நேற்றையதினம் ராஜிதவுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டார்.

வெள்ளைவான் சாரதி தொடர்பில் தகவல்களை பொலிஸாரிடம் தெரிவிக்காமல் மறைத்தமை மற்றும் முறைப்பாட்டாளரை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்காமல் தனது பாதுகாப்பில் வைத்துள்ளமை ஆகியன தண்டனைக்குரிய குற்றங்கள் என குறிப்பிடப்பட்டு குறித்த முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. (ம-3,10)

## காணாமல் போனோருக்கு நீதிகோரி

# ஆயிரமாவது நாளான 16ஆம் திகதி பிரித்தானியாவில் போராட்டம்



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக நீதி கோரி இலங்கையில் உறவுகளினால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி 1000ஆவது தினத்தை எட்டுகின்றது.

1000 நாட்களாக இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக தொடரும் இப்போராட்டத்திற்கு வலுச்சேர்ப்பதற்காக எதிர்வரும் 16 ஆம் திகதி மதியம் 12.30 முதல் 15.30 வரை, 10 Downing Street, London, SW1A2AA இல் கவனயீர்ப்பு போராட்டமொன்று நடைபெறவுள்ளது.

இதற்கான பிரசார பணிகள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் பிரித்தானியாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை தமிழர்கள் வாழும் பல பகுதிகளில் நடைபெற்றது.

முக்கியமாக தமிழர் கடைகள், தமிழ் மக்கள் கூடும் இடங்களை மையப்படுத்தி இப்பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

நாடு கடந்த தமிழீழ செயற்பாட்டாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், புத்திஜீவிகள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு, நாடளாவிய ரீதியில் ஒரே நாளில் தமிழ் மக்கள் செரிந்து வாழும் அனைத்து இடங்களிலும் பிரசாரம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தலைமன்னார் பகுதியில்

# படகு மூலம் இந்தியா செல்ல முயன்ற எட்டு பேர் கைது

(மன்னார்)

சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியாவுக்குச் செல்ல முயன்ற 8 இலங்கையர்கள் தலைமன்னார், மணல்பாறை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போது இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு சட்டவிரோதமாக குடியேற முயன்ற 8 பேரை கைது செய்துள்ளதாக, கடற்படை பேச்சாளர், லெப்டினனட் கொமாண்டர் இசுறு சூரியபண்டார தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 8 பேரில், 5 ஆண்கள், ஒரு பெண் மற்றும் சிறுவன் ஒருவரும் சிறுமி ஒருவரும் உள்ளடங்குவதாகவும் அவர்களிடமிருந்து கையடக்க தொலைபேசிகள் மற்றும் ஒரு சில ஆவணங்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் கடற்படையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதோடு, கடற்படையின் வழக்கமான கண்காணிப்பு நடவடிக்கை காரணமாக சட்டவிரோத குடியேறிகள் மற்றும் மனித கடத்தல்காரர்களையும் சட்டத்தின் முன் கொண்டுவர, கடற்படையால் முடிந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-3)

ஆங்கிலத்தைக் கண்டு அச்சமா?
இலக்கணத்தைக் காட்டி மிரட்டுகிறார்களா?
இலக்கணம் பற்றிய எந்த அச்சமுமின்றி 6ம் வகுப்புவரை தமிழில் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டதுபோல.
3ஏ மாதத்தில் ஆங்கிலத்தில் பேசுங்கள்!

| | | |
|---|---|---|
| Rapid ENGLISH | 20 Hrs | Rs. 5,000/- |
| Beginners Level | 40 Hrs | Rs. 10,000/- |
| Advanced Level | 80 Hrs | Rs. 20,000/- |
| IELTS Preparatory | 120 Hrs | Rs. 30,000/- |

Money Back Guarantee
3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேசாவிட்டால் பணம் மீளளிக்கப்படும்
CAMBRIDGE ENGLISH Language Assessment
வெளிநாடு செல்ல விரும்புவோர், தொழில் புரிவோர், பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்/மாணவர்கள், பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கு உகந்தது
(C-8205)
077 36 16 798
021 2219 221
SIKARAM ACADEMY
FAST TRACK to CAREERS
Sri Lankan Enterpreneur of the Year 2017
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
(இஷாரா ரெக்ஸ் → ரீன் கேர்ல் அருகே)

Inner Circle வேலைவாய்ப்புகள்
Job! Job! Job... 076 886 3253, 077 999 4807
நீங்கள் O/L, A/L பயின்றவரா? இவ்விலக்கங்களுக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க. நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை நிர்வாக அதிகாரி, செயல்திட்ட அதிகாரி, அலுவலக உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், மேற்பார்வையாளர். அனுபவம் இல்லையா? தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும். அடிப்படைச் சம்பளம் 13,500/= - 24,500/= + EPF, ETF
பயிற்சியின் பின் 45,000 வரை பெறலாம்.
(943)
INNER CIRCLE (Pvt) Ltd
No.100/03, 3rd Floor,
Manippay Road, Jaffna.

நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
60 நாட்கள் நிரம்பிய நல்லின டாசோன் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ஒரு குட்டியின் விலை 5000/=
தொடர்பு:
077 297 6255 (யாழ்.நகர்) (942)

வேலையாள் தேவை
புத்தூர் மேற்கில் அமைந்துள்ள சிறி கௌதமன் ஹாட்வெயாருக்கு கணக்காளராகப் பணியாற்ற பெண் வேலையாள் தேவை.
(C-8202) தொடர்பு : 076 401 1803

கார் விற்பனை
Suzuki, Estilo குறைந்த தூரம்
ஓடியது - 23,400 km
First Owner - Good Condition
விலை - 2 Million
077 605 9650
(933)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
(C-8115)
0768226240
V2 TRAVELS
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

வாடகைக்கு
நல்லூரில் தனி அறை, சிறிய சமையலறை, கோல் இணைந்த குளியலறை வசதியுடன் அனெக்ஸ் வாடகைக்குண்டு
(பெண்கள் மட்டும்)
070 398 9904
(C-8199)

British College of Higher Studies
BCHS
NEW BATCHES START!!
IELTS
Academic / General / Life skills A1/ B1
Diploma In English, Spoken English, Spoken Sinhala
Speaking / Reading / Writing/listening
Week days &weekend days
No.15, Stanley Road,
Sirambiyady lane, Jaffna.
021 222 4550, 076 138 0212
(C-8200)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.